
அம்மா ஆத்மா
அனுபமா
இந்திரா செளந்தர்ராஜன்

மின்நூல் உருவாக்கம்

சுபாஷ் சண்முகா

# அம்மா-ஆத்மா
# அனுபமா

இந்திரா சௌந்தர்ராஜன்

# 1

'உயிரானது உடம்பில் எங்கிருக்கிறது? அது எப்படிப்பட்டது? காற்றுதான் உயிரா? இல்லை உடம்பில்அடங்கியுள்ளஉஷ்ணம்தான்உயிரா? அதுவுமில்லை - ஓடும்ரத்தம்,துடிக்கும்இதயம், எதுஉயிர்...?

நினைக்கும் மனதில் உயிர் ஒளிந்து கொண்டிருப்பதாக கூறப்படுவது எந்த அளவிற்கு உண்மை?'

-கௌசிக் ஆச்சார்யா

**மௌ**ண்ட் ரோடில் இருக்கிறது வானவில் பத்திரிகை அலுவலகம். தப்பு தப்பு... 'அண்ணா சாலை' என்று அது மாற்றம் பெற்று பலப்பல வருடங்கள் ஆகியும் மௌண்ட்ரோட் என்றுதான் என் ஞாபகச் செல்கள் அறிவிக்கை செய்கின்றன. (மூளையே திருத்திக் கொள்)

சரி.. வானவில் பத்திரிகைக்கு என்ன... விஷயத்திற்கு வா என்கிறீர்களா? வரத்தான் போகிறேன். பத்திரிகைக்கு எந்த நேரத்தில் வானவில் என்று பெயர் வைத்தார்களோ தெரியாது... பத்திரிகை அலுவலகமும் வானவில்லாக வண்ணமயமாகத்தான் காட்சியளித்தது.

ஒரு கொடுமை.

கொடுமையிலும் கொடுமை.

இந்த புத்திரிகையில் நூற்றுக்கு எண்பது பேர் பெண்கள். இத்தனைக்கும் இது ஒன்றும் பெண்கள் பத்திரிகை கிடையாது.

இருந்தும் பொட்டச்சிகளின் ராஜ்யம்! (படவா பொட்டச்சின்னு இளக்காரமாவா பேசறே... பின்னிருவோம் ஆமா. பொட்டச்சியாம்ல பொட்டச்சி, தடிப்பயலே!)

அடைப்புக் குறிக்குள் இருக்கும் கமென்ட்டுகள் யாருடையது என்று மண்டையைப் போட்டுப் பிய்த்துக் கொள்ள வேண்டாம். அதுவும் என் உபயம்தான். என் வயிற்றெரிச்சலை நிச்சயம் இந்த பெண்கள் சரியாகப் புரிந்து கொள்ளப் போவதில்லை. ஆகவே லபோ திபோவென்று அவர்களாக கத்திக் கூப்பாடு போடுவதற்குள் நானாக போட்டு விட்டால் அது கொஞ்சம் பெட்டராக இருக்கும் இல்லையா?

எல்லாம் சரி.. நான் யார் என்று கேட்கிறீர்களா?

நான்தான் ராஜாமணி, எழுபதுகளில் விஜயகுமார்களும், ஜெய்சங்கர்களும் திரையில் ஜனித்த காலத்தில் தான் நானும் ஜனித்தேன். இருந்தும் என் பெயரில் ஒரு மாடர்னிடி இல்லாதபடி என் தாத்தா ஞாபகமாக ராஜாமணி என்று என் அப்பா ஒரு அழுக்குப்புடித்த பெயரை வைத்துவிட்டார். (ராஜாமணி என்றால் உன்னதமான அரசன் என்று ஒரு பொருள் உண்டாம்) டேய், ராஜாமணி... கூஜாமணி

று சத்தத்தோடு சேர்த்து எல்லோரும் டுவதற்கு தோதாக... எனக்கென்று பெரிதாக சரித்திரமெல்லாம் கிடையாது.

சரியான சொரிப்பயல் தான் நானும்!

கோனார்நோட்ஸை விற்று மார்னிங்ஷோ போயிருக்கிறேன். துண்டு பீடியை எடுத்து இழுத்துப் பார்த்து இருமியிருக்கிறேன். இந்துநேசன், வாலிபம் பத்திரிகைகளை பாடப் புத்தகத்துக்குள் வைத்து படித்திருக்கிறேன்.

மொத்தத்தில் எல்லா எழவும் எடுத்தவன்தான் நான்!

மிடில் கிளாஸ் இளைஞர்களின் ஒரிஜினல் பயோடேட்டாவை கணக்கில் எடுத்தால் இந்த கழுதைகள் எல்லாம்தானே அதில் அகப்படும்!

இந்த மிடில்கிளாஸ் கூட்டத்திற்கென்றே கண்டுபிடித்து வைத்திருக்கிற குமாஸ்தா உத்யோகமோ இல்லை அட்டெண்டர், ஜூனியர் அசிஸ்டெண்ட் இத்யாதிகளோ எனக்கு கட்டோடு பிடிக்கவில்லை.

புரட்சிகரமா எதையாவது செய்து கார், பங்களா என்று வாங்கி ஒரு தர்பார் நடத்திப் பார்க்க வேண்டும். இதுதான் எனது ஆசை.

அப்படியானால் அதற்கு ஒரு வழிதான் இருப்பதாக என் நண்பர்கள் சொன்னார்கள். என்ன என்று கேட்டேன். ஃபைனான்ஸ் கம்பெனி நடத்திவிட்டு ஓடிப்போய்விடச் சொன்னார்கள். இல்லாவிட்டால் சினிமாவில் சேரச்சொன்னார்கள்.

முன்னதைச் செய்ய துரோக புத்தி இருக்க வேண்டும். பின்னதற்கு உருவம் ஒத்துழைக்க வேண்டும். ஒரு அப்பா வேஷத்துக்குக்கூட நான் லாயக்காக மாட்டேன். கட்டை குட்டையான ஒரு மாதிரி சரீரம் எனக்கு...

இப்படியாக அவர்கள் சொன்ன இரண்டு சந்தர்ப்பங்களும் எனக்குப் பொருந்தவில்லை. சரி நமக்கு இந்த ஜென்மத்தில் பணக்கார தகுதியில்லை என்று என் மனதை என்னால் சமாதானப்படுத்த முடியவில்லை.

அப்பொழுதுதான் வானவில் பத்திரிகையைப் பார்த்தேன். அதில் முன்னுக்கு வந்தவர்களது பேட்டிகள் வரும். அது எனக்கு மிகப் பிடிக்கும்.

ஒருவர் தெருத்தெருவாய் ஊறுகாய் விற்று கோடீஸ்வரர் ஆகியிருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா! இன்னொருவர் திருப்பதி உண்டியலைத் திருடி லட்சாதிபதி ஆனவராம்.

ஓடும் ரயிலில் உண்டியலில் கைவைத்தவராம். எவ்வளவோ ஆயிரங்கள் அகப்பட்டதாம். அதைவைத்து தொழில் தொடங்கினாராம். அமோகமாக முன்னுக்கு வந்தாராம். இன்று சம்பாதிப்பதில் சரி பாதியை அந்த ஏழுமலையானுக்குக் கொடுத்து விடுகிறாராம்.

இப்படி ஒவ்வொரு பேட்டியும் ஒவ்வொரு ரகம். அவ்வளவும் எனக்குள் நம்பிக்கையை வளர்த்தது. நிச்சயம்

ரும் ஏதாவது ஒரு விதத்தில் பெரிய ஆளாகிவிடலாம் என்று நம்பினேன்.

அப்பொழுதுதான் அந்த பத்திரிகையில் ஒரு புகைப்படத்தைப் பார்த்தேன். அது ஒரு ஆவியின் புகைப்படம். ஆவி என்றால் இட்லி குக்கர் ஆவியையும், ஊதுபத்தி புகை ஆவியையும் நீங்கள் கற்பனை செய்து கொண்டு விடாதீர்கள்.

இது இறந்துபோன ஒருவரின் சூட்சுமம் சரீரம்.

அதை ஒருவர் புகைப்படம் எடுத்து வானவில்லுக்கு அனுப்பியிருந்தார்.

ஒரு பாழடைந்த பங்களாவில் ஒரு மழை இரவில் தங்க நேரிட்டதாகவும், அப்போது அங்கே ஆவியை உணர்ந்து அந்த படத்தை எடுத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

வானவில்லும் அதை வெளியிட்டிருந்தது.

இதை வாசகர்கள் நம்ப முடிகிறதா? என்று பதில் கேள்வி கேட்டிருந்தது. அந்த தொனியே நாங்கள் இதை நம்புவதாக இல்லை என்பதாகத்தான் எனக்குப்படுகிறது.

சரி, புகைப்பட வித்தகர்கள் என்ன சொல்கிறார்களாம்?

இந்த கேள்வியை நான்தான் அந்த பத்திரிகையிடம் கேட்டேன். அடுத்த வாரமே பதில் வந்தது. அதன்படி அது ஆவியினுடைய உருவம் அல்ல. [illegible]விதமான 'ட்ரிக் ஷாட்' என்று வல்லுநரைச் சேர்ந்த ஒரு புகைப்பட

நிபுணர் கூறியதாக பத்திரிகையில் செய்தி வெியிட்டது. ஆனால் அந்தப் புகைப்படம் எடுத்த நபரோ லபோ திபோ என்று குதித்தார். அவரது செத்துப்போன, போகாத தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, மனைவி, மக்கள் அத்தனை பேரிலும் சத்தியம் செய்தார்.

சரி, மனிதர் இத்தனை தூரம் சாதிக்கிறாரே என்று நானே அவரைப் போய்ப் பார்த்தேன். அவரும் என்னை அந்த பாழடைந்த பங்களாவிற்கு அழைத்துச் சென்றார். எங்கிருந்து எப்படி எல்லாம் புகைப்படம் எடுத்தார் என்பதை டெமான்ஸ்ட்ரேட் செய்து காண்பித்தார். ஒரு ஆச்சரியம் அவர் அப்படிக் காட்டிக் கொண்டிருக்கும்போதே ஒரு ஆவி எங்கள் எதிரில் தோன்றி மறைய ஆரம்பித்தது. எனக்கு ரத்தமெல்லாம் ஃபிரிட்ஜில் வைத்த ஐஸ் வாட்டர் போலாகிவிட்டது.

சுதாரித்து சமாளித்து மீண்டும் படம் எடுத்தோம்.

முன்பாவது அவர் தனிமையில் எடுத்தார். இந்த முறை நானும் சேர்ந்து கொண்டு எடுத்ததில் அவருக்கு நானும் எனக்கு அவரும் சாட்சியாகி விட்டோம்.

இப்படியாக மீண்டும் புகைப்படத்தோடு வானவில் பத்திரிகைக்குப் போனோம். அங்கே உதவி ஆசிரியர் பொறுப்பில் ஒரு பெண் இருக்கிறாள்.

பெண்ணா அவள்...நல்ல அரபுக் குதிரை!

எங்களைப் பார்த்த விதமே

சரியில்லை.

புகைப்படத்தைக் காட்டி அவளிடம் நடந்ததைச் சொன்னோம். நமுட்டுச் சிரிப்பு சிரித்தபடி கேட்டுக் கொண்டாள். "சரி, புகைப்படத்தைக் கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று ஏதோ ஒரு ரோஜாப்பூவை நாங்கள் படமாக எடுத்து வந்திருக்கும் பாவனையோடுதான் பார்த்தாள்.

எனக்கு ஒன்று மட்டும் நன்றாக புரிந்தது. அந்த ஆவியே நேரில் அந்த பெண் எதிரில் வந்தாலும் அவள் நம்பப் போவதில்லை என்பதுதான் அது.

அனுபமா! உன்னை அந்த ஆத்மா

# 2

'எது உயிர்?

இந்தக் கேள்விக்கு விடையைத் தேடி பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. செத்துப் போய்விடுவார் என்று கட்டாயம் நம்பும் ஒருவரை (அ) ஒரு நாயை (அ) குதிரையை கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து உள்ளே ஒருதுளி காற்று இல்லாதபடி செய்து ஆராய்ச்சிகள் செய்து பார்க்கப்பட்டதாம்.

ஒருவேளை உயிர் என்பது மூச்சுக்காற்றாக இருந்தால் அது உடம்பை விட்டு விடுபடும்போது பெட்டிக்குள் அடைபட்டுவிடும்.

காற்றுதான் உயிர் என்பதும் நிரூபணமாகிவிடும் அல்லவா?

ஆனால், இந்த ஆராய்ச்சியை விஞ் ஞானிகள் ர்சிக்கவில்லை, அபத்தம் என்றனர்'

-கௌசிக் ஆச்சார்யா.

பரபரப்பாக இருந்தாள் அனுபமா!

பேனாவைக் கையிலெடுத்து விட்டால் காகிதத்தின் மேல் அது இங்க்கைக் கக்கி எழுத்துக்களைப் பிரசவிக்கச் செய்வதில் ஒருவித எக்ஸ்பிரஸ் வேகம்.

இதில் சரிந்து முன்னால் விழும்- ஒரு ரப்பர் பாண்டில் கட்டிய கூந்தலின் நெற்றிக் கற்றைகளின் இடைஞ்சலும் அடக்கம்.

எதையும் சட்டை செய்யாதபடி "சர்.. சர்" என்று எழுதி பக்கங்களைக் குவித்துவிட்டு நிமிர்ந்தால் தாமரைப் பூவை பார்க்கிற மாதிரி இருக்கும். அத்தனை புஷ்டியான ரோஸ் நிற முகம் அவளுக்கு. அதில் ஆச்சரியப்படுத்தும் குங்குமப் பொட்டு!

எழுந்து நின்றால் தான் அவள் உயரம் தெரியும். அழகிப் போட்டிக்கு போயிருந்தால் யுக்தாமுகியை நிச்சயம் ஓரம் கட்டியிருப்பாள்.

(ஆனால் கொள்கை ரீதியாக அதை பலமாக எதிர்ப்பவள் அவள்)

இப்படி லட்சணமாய் ஒரு பெண் இருந்தால் அவள் சைட் அடிக்கப்பட்டு தானே தீரவேண்டும்?

சும்மாணையில் தொழிந்து நிகழ்ந்தது.

லே-அவுட் ஆர்ட்டிஸ்ட் அரவிந்தனிலிருந்து அக்கவுண்ட்ஸில் இருக்கும் ஹரிபாஸ்கர் வரை கையில் அப்ளிகேஷனோடு சாரி, கண்ணில் அப்ளிகேஷனோடுதான் அலைகின்றனர்.

ஆனால் காதலில் அனுவிற்கு சுத்தமாக நம்பிக்கை இல்லை.

இப்பொழுது அதுதொடர்பாகத்தான் ஒரு கேள்விக்கு பதில் எழுதிக் கொண்டிருந்தாள்.

மதுரையில் இருக்கிறார் பி.எல். பரமசிவம். இவருக்கு வாசகர் திலகம் என்ற பட்டம் தரலாம். இவர் கேள்வி கேட்காத பத்திரிகையோ, கடிதம் எழுதாத வார இதழோ தமிழ்நாட்டில் இல்லை.

அவருடைய கேள்விக்குத்தான் பதில் எழுதிக் கொண்டிருந்தாள்.

கேள்வி மேடம்! காதல் பற்றி உங்கள் கருத்து...?

பதில்: அப்பா, அம்மா, அண்ணன், தம்பி நண்பர்கள் மேல் நாம் வைக்கும் பாசம் கலந்த அன்பை ஒரு பெண்மேல் வைக்கும்போது தான் அதைக் காதல் என்கிறோம். ஏன் அதையும் அன்பு என்று சொல்லுவதில்லை? இந்த அன்பில் கூடுதலாக ஒரு எதிர்பார்ப்பும் இருக்கிறது. அந்த எதிர்பார்ப்பு கலக்கப்பட்டுவிட்டால் அந்த அன்பு காதல் ஆகிவிட்டது. கலக்கப்பட்டது எது? காமம் தானே? காமம் கலந்த அன்பு கல்யாணத்திற்குப் பிறகு மனைவியிடம் வந்தால் உத்தமம்,

முன்னால் வந்தால் அது ஒழுக்கக்கேடு!

—பதிலை எழுதி முடித்துவிட்டு நிமிர்ந்தாள். பிரிண்டிங் செக்ஷனில் இருந்து அய்யாசாமி வந்து நின்று கொண்டிருந்தான்.

"என்ன அய்யா...

"மேட்டர் ரெடின்னா கொடுங்கம்மா. நானே கம்ப்யூட்டர்ல கீ பண்ணி ப்ரிண்ட்டுக்கும்' ரெடி பண்ணிடறேன்.."

"இந்தா..."

"படிக்கலாமாம்மா...

"என்ன கேள்வி இது. எல்லாரும் படிக்கத்தானே நானே பதில் சொல்றேன்."

"இருக்கலாம்மா. ஆனா இப்படி அவிச்ச இட்லி மாதிரி சூடா- எழுதுன உடனே படிக்கிற பாக்யம் எத்தனை பேருக்குமா கிடைக்கும்" என்றபடி அவள்து கேள்வி பதிலைப் பார்த்தான். படித்தான். படித்து முடித்த நிலையில் திருப்தியாக இருந்தால் ஒரு புன்னகையோடு, "நல்லா எழுதியிருக்கீங்கம்மா" என்றபடி நகர்ந்து விடுவான். இல்லாவிட்டால்தான் பம்முவான்.

இன்றும் பம்மினான்.

"என்ன அய்யா...

"என்னம்மா காதலைப் போய் இப்படிச் சொல்லிட்டீங்க...?"

"தப்பா..?"

"அப்படித்தாம்மா படுது"

"எப்படி...?"

"கல்யாணத்துக்கு முந்தி காதலிக்கறதை ஒழுக்கக்கேடுங்கறீங்களே..."

"வேற அதை எப்படிச் சொல்றதாம்...?"

"எப்படிம்மா ஒழுக்கக் கேடாகும்? நானும் என் பொண்டாட்டியும் காதலிச்சுதான் கல்யாணம் செய்துகிட்டோம். கழுதையை மூணு வருஷம் காதலிச்சேன். அப்ப அந்த மூணு வருஷம் நான் ஒழுக்கக்கேடானவனா?"

"நல்ல கேள்வி.. உன் மனைவியை நீ எதுக்காக காதலிச்சே...?"

"என்னம்மா கேள்வி.. பிடிச்சிருந்துச்சு.. காதலிச்சேன்."

"எது அவங்ககிட்ட உனக்கு பிடிச்சிருந்துச்சு?"

"இப்படி கேட்டா எப்படிம்மா பதில் சொல்றது. எனக்கு சொல்லத் தெரியலம்மா. ஆனா ஒண்ணு மத்த பொண்ணுகள விட அவ கூடுதலா என்னை இழுத்தா..."

"அப்படி இழுத்தது எது?"

"எதுன்னா?"

"அவங்க புத்திசாலித்தனத்தை?"

"அப்படிச் சொல்ல முடியாது. ஆனா அவ நல்ல புத்திசாலிம்மா..."

"சொல்ல முடியாதுன்னா என்ன அர்த்தம்?"

"அது வந்தும்மா நான் முதல் முதலா அவளைப் பார்த்தப்போ அவ புத்திசாலியா

முட்டாளான்னு எப்படிம்மா தெரியும்?"

"அப்ப அவங்ககிட்ட உனக்கு தெரிஞ்சது எது?"

"தெரிஞ்சது எதுன்னா.. எதுன்னா.. நல்லா பர்சனாலிடியா இருப்பா... கருப்பா இருந்தாலும் நல்ல களையா இருந்தா... அதுதான்னு சொல்லலாம்..."

"சுருக்கமா சொல்லப் போனா உடம்பு"

"ஆமாம். ஆமாம்...

"உடம்பால வர்ற ஆசைக்குப் பேர் என்ன?"

"புரியுதும்மா... அந்த ஆசையை காமம்னு சொல்ல வர்றீங்க. அதுல தப்பு என்னம்மா இருக்கு? நம்ம அப்பா அம்மா காமத்துல வந்தவங்கதானே நானும் நீங்களும்...

"நான் காமத்தைக் குறை சொல்லலை அய்யாசாமி. அந்த காமம் வர்ற விதத்தை சொல்றேன்."

"சரிம்மா காமத்துலதான் காதல் ஆரம்பிக்குது. அதை குத்தம்னு சொல்றீங்களா?"

"அது குற்றமா ஆயிடுது அய்யாசமி."

"எப்படிம்மா...?"

"இப்ப நீ காதலிச்சே. கல்யாணம் பண்ணிகிட்டு நல்லா இருக்கே. சரி காதலிக்கும்போது காமத்தால் தப்பு பண்ணி அந்த காமமும் ஒரு கட்டத்துல அலுத்துப் போயிடுதுன்னுவை. பிறகு என்ன செய்வே?"

"கைவிட்டுட்டு வேற பொண்ணைப் பார்ப்பேன்னு சொல்றீங்களா?"

"அப்படிப் பண்றவங்க இருக்காங்களா இல்லையா?"

"ஏம்மா கல்யாணம் பண்ணிகிட்டு நல்லா இருக்கிறவங்களை சொல்ல மாட்டேங்கறீங்க...?"

"கல்யாணம் பண்ணிகிட்டு நல்லா இருக்கறவங்க எதனால நல்லா இருக்காங்க தெரியுமா?"

"எதனாலம்மா...?"

"இப்ப நீ காதலிச்சே... நீ காதலிச்ச பொண்ணு நல்ல புததிசாலின்னும் சொன்னே... ஒருவேளை அப்படி புத்திசாலியா இல்லைன்னாலோ, இல்லை அந்த பொண்ணுகிட்ட வேறு குற்றம் குறைகள் இருந்தாலோ நீ நல்லா இருக்கறதா சொல்வியா?"

"எப்படிம்மா சொல்வேன்..

"அப்ப காதலிக்கற பொண்ணு நல்ல விதமா எல்லா விதத்துலையும் இருந்தாதான் ஆச்சு. இல்லேன்னா போச்சுதானே?"

"அது.. அது... அப்படியும் சொல்லலாம்..

"அப்ப காதலிக்கும்போது உத்தரவாதமா அதெல்லாம் தெரியறதில்லதானே..?"

"அது... அது... ஆமாம்மா...

"அப்ப அமைஞ்சாதான்... இல்லேன்னா போச்சு சரியா?"

"அ... ஆமாம்மா...

"இப்படி சூதாட்டம் மாதிரி அமைஞ்சா தான். இல்லேன்னா தோல்வி அடையற காதலை எப்படி ஒசத்தியா நினைக்க முடியும்.?"

"அப்ப பெத்தவங்க பண்ணி வைக்கற கல்யாணத்துல இந்த மாதிரி சிக்கல் இல்லேங்கறீங்களா?"

"அதுல ரொம்ப குறைவு. அப்படியே இருந்தாலும் பண்ணி வைச்சவங்களுக்கு சிக்கலை தீர்த்து வைக்கிற தார்மீகப் பொறப்பு உண்டு. காதல்ல எல்லா சுமையும் நம்ம மேலதானே...?"

"நீங்க என்ன சொன்னாலும் சரிம்மா. என்னால ஒத்துக்க முடியல. உங்க பதிலைப் படிக்கறவங்க... காதலிச்சு தோல்வி அடைஞ்ச ஒரு பொண்ணோட புலம்பல் இதுதான்னு சொல்வாங்க. இல்லாட்டி காதலுக்கு அர்த்தம் தெரியாத ஒரு பொண்ணோட அரைவேக்காட்டுத்தனமான பதில்னுதான் இதைச் சொல்வாங்க.."

"அவங்க அரைவேக்காடா இருந்தா அப்படித்தான் சொல்வாங்க. ஒரு பாம்போட ஒருத்தர் கண்ணாடி கூண்டுல நூறுநாள் வாழ்ந்துட்டு வெளிய வர்றார். அவரை சாதனையாளர்னு சொல்றோம். பாம்பு கடிக்கலை. எல்லா பாம்பும் தங்கமான பாம்புங்க. அதனால அவர் செய்தது ஒண்ணும் சாதனை இல்லைன்னு யாரும் சொல்றது கிடையாது. அப்படித்தான் காதலும். கடிபடாம தப்பிட்டதால்

காதல்ங்கற பாம்பு விஷமில்லாத நல்ல விஷயமா ஆயிடாது..."

"அப்ப காதலும் பாம்பும் ஒண்ணாம்மா..?"

"நிச்சயமா!"

-அதற்குமேல் அய்யாசாமி அவளிடம் பேச்சை வளர்க்க விரும்பவில்லை..

ஆனால் சற்று தள்ளி அமர்ந்திருந்த நிலையில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த லே-அவுட் ஆர்ட்டிஸ்ட் அரவிந்தனுக்கு நிறையவே நெஞ்சை வலித்தது.

"காதல் பாம்பு இல்லை அனு... இதை உனக்கு புரிய வைப்பேன்.. இல்லாவிட்டால் உன்னை காதலித்துக் கொண்டிருக்கும் நானும் ஒரு பாம்பாகி விடுவேன் என் இனிய தேவதையே...!"

தன் கருத்தை தனது டைரியில் எழுதி அதை படித்தும் பார்த்துக் கொண்டான்.

அப்பொழுது அவளை எடிட்டர் கூப்பிடுவதாக ஆபீஸ் பாய் வந்து சொல்ல அவளும் எழுந்து சென்றாள்.

'குட்மார்னிங்... கூப்டீங்களா சார்?"

-என்றபடி எடிட்டர் ராம்நாத் எதிரில் போய் நின்றாள்.

"இந்த போட்டோவை பாரும்மா."

எடிட்டர் ஒரு புகைப்படத்தை எடுத்துப் போட்டார். அவளும் பார்த்தாள்.

"என்ன சொல்றே இதைப் பத்தி...

"இந்தப் படத்தை நான் ஏற்கனவே பார்த்துட்டேன். அந்த ராஜாமணி ஒரு

கிறுக்கன் சார்.

"ஆனா அந்த ஆள் சாதிக்கறான். சந்தேகமா இருந்தா நம்ம போட்டோகிராஃபரை அனுப்பச் சொல்றான். அந்த ஆவியைக் காட்றானாம்..

"டயம் தான் வேஸ்ட் ஆகும் சார்...

"வித்தியாசமான விஷயம். போய் என்னன்னு தான் பார்த்துட்டு வந்துடுவோமே..."

"திரும்பவும் சொல்றேன். வெட்டி வேலை சார் இது. ஆவி பேயெல்லாம் மனுஷனோட வக்ரமான கற்பனை.."

"அதை ஆதாரத்தோட நாம மறுப்போமே..

"சரி.. நான் போட்டோகிராஃபர்கூட போறேன்.."

"நீயா...?"

"ஆமாம்.. நானேதான். எனக்கும் பேய் பிசாசையெல்லாம் பார்க்கணும்னு ரொம்ப நாளா ஆசை சார்.."

எடிட்டர் அதிர்ந்தார். 'குட்' என்றார்.

"நீ கூட ஒரு அழகான ராட்சஸிதான்" என்று சொல்லிக் கமெண்ட் அடித்தபடி இன்டர்காமில் போட்டோ கிராஃபரைக் கூப்பிட ஆயத்தமானார்.

# 3

*'சில ஞானிகள் தங்கள் உயிர் பிரியும் நேரத்தை முன்பே கண்டறிந்து வைத்திருந்தனர். அதற்கு ஜோதிடம் துணை செய்ததாக அவர்கள் சார்பில் பலர் கூறினர். எது எப்படியோ! உயிர் பிரிவது என்பது மூச்சடங்கிப் போவதைத்தான் குறிக்கிறது. மூச்சடங்கிய பிறகு வெப்பம் அடங்குகிறது. எனவே வெப்பமும், காற்றும் தான் உயிர்க் கலவைய்யா?'*

**-கௌசிக் ஆச்சார்யா**

**கா**லிங்பெல் சப்தம் கேட்டு வந்து கதவைத் திறந்தான் ராஜாமணி. (முதல் அத்தியாயத்தில் புலம்பு புலம்பு என்று புலம்பியவன்!)

அவன் எதிரில் நெற்றி முடியை ஒதுக்கியவளாக அனுபமா.

*"நீங்க...?"*

"தெரியலியாக்கும். அனுபமா...

"ஓ... வானவில் தேவதை"

*"ஏய்ய்...!"*

*"சரி, உள்ற வாங்க கமான்"*

-அவன், அவள் மட்டும் என்று நினைத்து உள்ளே அழைக்க சற்று தள்ளி 'தம்' அடிக்கத் தொடங்கியிருந்த போட்டோகிராஃபர் சிகரெட்டோடு அனுபமாவை பார்த்து 'நீங்க பேசிட்டு

கிளம்பி வாங்க மேடம்' என்றான்.

தலையில் அடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். பேச்சுலர் ரூமுக்கு இலக்கணம் சொன்னது அந்த அறை. மேல் மார்பை வழியவிட்ட ஐஸ்வர்யா ராய்...? பருத்த தொடையோடு ரம்பா, துறுதுறு முகத்தோட ஜோதிகா, போனால் போகிறதென்று டெண்டுல்கர் - இவர்கள் ப்ளோ- அப் போஸ்டர்களாய் சுவர்களில் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

அறையில் கொஞ்சம் அழுக்கு வாசம் இருந்தது, மூக்கு நுனியை அனுபமா தேய்த்துக்கொள்ளும்படி செய்தது.

"உக்காருங்க.. எங்க இவ்வளவு தூரம்?"

"எல்லாம் பேயையும், பிசாசையும் பாக்கத்தான்."

"ஓ.. அந்த பாழடைஞ்ச பங்களாவுக்குப் போய் நேர்ல பாக்கத்தான் கிளம்பி வந்திருக்கீங்களா?"

"நான் பாக்கறதுக்காக வரலை. நீங்க காட்டப்போறதை கன்ஃபார்ம் பண்ணிக்க வந்துருக்கோம்."

"என்ன மேடம் இது திடுதிப்னு...?"

"உங்களுக்கு போன் இல்லை.. இருந்தா போன் பண்ணி சொல்லிட்டு வந்திருப்பேன்."

"அப்ப இப்ப நாம அங்க போகப் போறோமா?"

"எப்பவேணா வரலாம். நான் அந்த ஆவியைக் காட்றேன்னு எங்க எடிட்டருக்கு

லெட்டர் எழுதிட்டு இது என்ன கேள்வி.''

-அனுபமா மடக்கலில் சற்று திணறியவன் "ஓகே மேடம்" என்றபடி அவள் எதிரில் நெளிந்தான்.

"என்ன...?"

"கொஞ்சம் வெளியே போய் நின்னா வசதியா இருக்கும்."

-அவள் புரிந்து கொண்டாள். தலையில அடித்துக்கொண்டு வெளியில் வந்தாள். அவிழ்த்துப் போட்டிருந்த ஜட்டி ஒன்று காலை இடறியது. ஃபுட்பால் போல் உதைத்து ஓரம் கட்டி விட்டு வெளியே வந்தாள்.

புகைப்படக்காரன் பரமும் சிகரெட்டை மில்லி மீட்டர் கூட விரயம் செய்து விடக்கூடாது என்கிற மாதிரி உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

"என்ன மேடம் கிளம்பறோமா?"

"இரு.. டிரெஸ் மாத்திக்கிட்டு வந்துடட்டும்."

"அது சரி... நிஜமா பேய் இருக்குதாமா?"

"இருந்தா யர் அதை விட்டா..?"

இருவரும் ஜாலியாக பேசிக் கொள்ள ராஜாமணி ஒரு அழுக்கு ஜீன்சும் டி ஷர்ட்டுமாய் வெளியில் வந்தான்: அவசர அவசரமாய், கதவைப் பூட்டி சாவியை கஷ்டப்பட்டு முன்பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

இருவர் எதிரிலும் வந்து தோளை

எக்கியபடி "நான் ரெடி" என்றான். பத்திரிகை அலுவலகத்துக்கு சொந்தமான கார் '"PRESS" என்கிற ஸ்டிக்கருடன் காத்துக் கொண்டிருந்தது. ஏறிக் கொள்ளவும் விரைய ஆரம்பித்தது.

காருக்குள் தீவிர சிந்தனையில் இருந்தான் ராஜாமணி.

"என்ன மிஸ்டர்! நாங்க வருவோம்னு நீங்க எதிர்பார்க்கலையா?" பேச்சை ஆரம்பித்தாள் அனுபமா.

"ஆமாம் மேடம்.. போகட்டும். நான் சொன்னது உண்மைன்னா எனக்கு என்ன மேடம் உங்கப் பத்திரிகைல தருவீங்க..?"

"அப்ப எதையோ எதிர்பார்த்துத்தான் போட்டோவை அனுப்பியிருக்கீங்களா?

"இல்லையா பின்னே...? அது அபூர்வமான போட்டோவாச்சே..!"

"சரி.. நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க?

"ஒரு லட்ச ரூபா கேஷா கொடுத்துடுங்க.."

"என்னது..? ஒரு லட்சமா?" அதிர்ந்தாள் அனுபமா.

"அதுவே! ரொம்ப கம்மி மேடம். இதே ஃபாரின் கன்ட்ரியா இருந்தா பல லட்சம் கிடைக்கும்.." ராஜாமணி ஒரு தீர்மானத்தோடுதான் பேசினான்.

"சரி. பொய்யின்னா நீங்க ஒரு லட்ச ரூபா தருவீங்களா?" மடக்கினாள் அனு.

"தாராளமா.. பொய்யா இருந்தா இவ்வளவு தைரியமா எப்படி பேசுவேன்.."

"அப்ப அந்த பாழடைஞ்ச பங்களாவில் நாம் இப்ப போய் ஆவியை பார்க்கப் போறோம்."

"நான் பாத்துட்டு போட்டோவும் எடுத்திருக்கும்போது அதுல எனக்கு என்ன மேடம் சந்தேகம்?"

ராஜாமணி பதட்டமேயில்லாமல் பேசினான். மிக திடமாக இருந்தான்.

ஒருவேளை அந்த பாழடைந்த பங்களாவில் ஏதாவது தில்லுமுல்லு செட்டப் செய்திருப்பானோ?

சந்தேகம் அனுபமாவிற்கு ஒரு குதிகுதித்தது.

போட்டோகிராஃபர் பரமுவை திரும்பிப் பார்த்தாள். அவன் முகத்தில் அநியாயத்திற்கு ஒரு கேலி.

"என்ன பரமு... நீ என்ன நினைக்கறே..?"

"அடபோங்கம்மா.. ஆவி பேய்னுகிட்டு! ஒண்ணு மட்டும் சொல்றேம்மா. அங்க மட்டும் இந்த ஆள் ஆவியை காட்டலை. அதே இடத்துல இந்த ஆளை ஆவியாக்கி உண்டு இல்லனு பண்ணிடுவேன்" என்றான் காட்டமாக.

ராஜாமணி அதைக் கேட்டு சிரித்தான்.

# 4

“எனது உயிராய்வில் நான் பல உண்மைகளைக் கண்டறிந்தேன். உடலை விட்டு ஒரு ஒளி உடம்பு பிரிந்து போவதை ஒருமுறை நான் பார்த்தேன். அது சினிமா திரையில் விழும் நிழல் உருவம் போலத்தான் இருந்தது. எனவே உடம்பானது ஒரு சூட்சும சரீரத்தோடு இருப்பதைக் கண்டு கொண்டேன். அந்த சூட்சும சரீரம் நம் திட சரீரத்தைவிட்டுப் பிரிவதைத் தான் உயிரின் பிரிவாக உலகம் சொல்கிறது.”

***-கௌசிக் ஆச்சார்யா***

**டொ**க்... டொக்..!

-கதவு தட்டப்படவும் உள்புறமிருந்து திறந்தாள் சிவகாமி.

வெளியில் வாசல் படிக்கும் அப்பால் கல்யாண புரோக்கர் ராமசாமி.

“வாங்க...” உள்ளே அழைத்தாள். அவரும் உள்ளே கால்வைத்து நடந்து ஹாலில் கிடந்த சோபாவில் வாத்சல்யமாக உட்கார்ந்தார். உட்கார்ந்த ஜோரில் தோல்பையைப் திறந்து சில புகைப்படங்களை எடுக்கத் தொடங்கினார்.

“என்னத்த எடுக்கறீங்க..?”

"நீங்க கேட்டிருந்த மாப்பிள்ளைங்க போட்டோக்களைத்தான்.."

"போட்டோ வேண்டாம். முதல்ல ஜாதகத்தை கொடுங்கன்னு சொன்னேனில்லயா?"

"ஜாதகமா...?"

"பின்ன... ஜாதகம் பொருந்தி இருந்தாத்தான் போட்டாவே பார்ப்பேன்னு உங்ககிட்ட சொல்லலை?"

"இப்பல்லாம் யாரும்மா ஜாதகம் பாக்கறாங்க?"

"யார் பாக்கறா, பாக்கலைங்கறத பத்தி எனக்கும் கவலை இல்லை. நான் பாக்கறேன். பாத்தாகணும்."

புரோக்கர் ஒரு வித ஏமாற்றத்தோடு வெகாமியை பார்த்தார்.

"என்ன பாக்கறீங்க... ஒரே பொண்ணு தான் எனக்கு. அவளை நல்லவிதமா கட்டிக் கொடுக்கணும். அதுக்கு தான் நான் உயிரோடையே இருக்கேன்.."

"போட்டோவைப் பார்த்து முடிவு செய்தா நல்லா இருக்க மாட்டாங்களா அவங்க...?"

"இதோ பாருங்க ராமசாமி மனுஷனுக்கு ஜாதகம்னு ஒண்ணு இருக்கறதே. கல்யாணம் பண்ணும்போது பயன்படத்தான். கல்யாணம்கறது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல. உயிரும் உயிரும் சேர்ந்து சந்ததிங்கற இன்னொரு உயிரை உருவாக்ற தலைமுறை விஷயம். இதுல ஏழாம் பொருத்தமா புருஷன்

பொண்டாட்டி அமைஞ்சுட்டா அப்புறம் காலம் பூரா யார் கஷ்டப்பட்றது...?"

"சரிம்மா... ஜாதகம் உள்ள வரனோட வந்து பாக்கறேன்." என்றபடி ராமசாமி எழுந்திருந்தார்.

"ஜாதகம் இருந்தாதான் கல்யாணம். இல்லேன்னா கிட்டையே வராதீங்க..."

"சரிம்மா..... ஜாதகம் இருந்து பொருந்தலேன்னா?"

"பொருந்தணும். பொருந்தினாத்தான் கல்யாணம்..."

"உங்க பொண்ணும் ஜாதகத்தை நம்புதா?"

"அவ நம்புறா.. நம்பலை, நான் நம்பறேன். நீங்க வளவளன்னு பேசாம புறப்படுங்க..."

சிவகாமி, புரோக்கர் ராமசாமியை சற்றேறக்குறைய விரட்டினாள்.

ராமசாமியும் வேறு வழியின்றி புறப்பட்டார். அவர் தலை அந்தப் பக்கமாய் மறைந்திருக்கும். இந்தப் பக்கமாய் ஜோதிடர் வைத்தியநாதய்யரே சிவகாமியைத் தேடி வந்து கொண்டிருந்தார்.

"வாங்க ஜோசியரே...

"நல்ல வரன் ஒண்ணு வந்துருக்கும்மா. அதான் பாத்துட்டு போகலாம்னு வந்தேன்." என்றபடியே சோபாவில் விழுந்தார் ஐயர்.

"ஜாதக பொருத்தம்லாம்..."

"பத்து பொருத்தமும் பொருந்துதுமா. பையனும் நல்ல குடும்பம்

சொத்துபத்துக்கும் பஞ்சமில்லை."

"அப்படியா... பையன் எந்த ஊர்?"

"பக்கத்துல சங்ககிரிம்மா...

"நீங்க சொன்னா சரியாதான் இருக்கும். எனக்கு ஒரே பொண்ணு. அவளுக்கு எல்லாமே நான்தான்.."

"போதும்மா... நீங்க எதையும் சொல்ல வேண்டாம். அனு எனக்கும் ஒரு மகள் மாதிரிதான். நல்ல வரனா அமைஞ்சதால அதைவிட்றக்கூடான்னு சொல்லத்தான் நானே நேர்ல வந்தேன்."

"ரொம்ப சந்தோஷம்... பையனைப் பத்தின மத்த விபரங்கள்...?"

"பையன் எஞ்சினியர். கோயமுத்தூர் சொந்த ஊர். மேட்டுப்பாளையம், ஊட்டி இங்கல்லாம் நிலபுலன் இருக்குது. அது தவிர நாலைஞ்சு வீட்டை வாடகைக்கு விட்டிருக்காங்க. வருமானத்துக்கு பஞ் சமில்லை."

"அது சரி.. குணமெல்லாம்...

"தங்கமான பையன்மா...

"சிகரெட் பீடின்னு...?"

"அதெல்லாம் இன்னிக்கு தவிர்க்க முடியாத பழக்கமா இருந்தும் இந்த பைன்கிட்ட அப்படி எல்லாம் எந்த் கெட்டபழக்கமும் இல்லை..."

"அப்ப அவங்களை பொண்ணு பார்க்க வரச் சொல்லுங்க ஜோசியரே..."

"சொல்றேன்... எதுக்கும் அனுகிட்ட ஒரு வார்த்தை சொல்லிடுங்க.."

"அவ எப்பவோ சொல்லிட்டா. நான் ஒரு கழுதையைக் காட்டி 'இதுதான் உன் புருஷன்'னாலும் சந்தோஷமா ஏத்துப்பா."

"இந்தக் காலத்துல இப்படி ஒரு பொண்ணான்னு ஆச்சரியமா இருக்கு.."

"அனு சாதாரண பெண்ணில்ல, என்னோட புதையல் அவ."

"உண்மைதான். படிப்பு, தைரியம், இதெல்லாம் யாருக்கு வரும். சரி நான் புறப்படறேன்.."

"இருங்க... பால் சாப்பிட்டு போங்க...

"பரவாயில்லம்மா...

"இல்லயில்ல... நல்ல விஷயம் சொல்லிட்டு நீங்க இப்படி வெறும் வயிறோட போகக்கூடாது. ஒரு நிமிஷம்.."

சிவகாமி உள்ளோடினாள். ஐயர் கவனம் வீட்டின் மற்ற பக்கங்களில் ஓடியது. சுவரில் சிவகாமியின் கணவன் புகைப்படம்.

சிவகாமிக்கு திருமணமான அடுத்த வருடமே அனுபமா வயிற்றில் இருக்கும்போதே.. ஒரு விபத்தில் போய்ச் சேர்ந்துவிட்டவன்.

அனுவைப் பொருத்தமட்டில் அப்பா, அம்மா எல்லாமே சிவகாமிதான். ஒரு பள்ளிக்கூட வாத்தியாராக அவள் வேலைக்குப்போய் அனுபமாவை வளர்க்கப்பட்ட பாடும், அவளும் வளர்ந்து இன்று ஒரு பத்திரிகையில் துணை

ஆசிரியர் ஆகிவிட்டதும் ஜோசியருக்குள் ஒருமுறை உலா போனது.

கிட்டதட்ட முப்பது வருட பழக்கம்.

பாலோடு வந்தாள் சிவகாமி. அதை வாங்கிப் பருகும்போது ஐயர் கண்களில் பனிப்பு.

"எப்படியோம்மா.. வாழ்க்கைல போராடி உங்க மகளை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்துட்டீங்க." என்றார் அந்த பனிப்போடு.

"இன்னும் இல்ல ஜோசியரே... அவளுக்கு ஒரு கல்யாணம் நடக்கணும். அப்பதான் என் கடமை முடியும்.." என்றாள் சிவகாமி அழுத்தமாக.

ஜோதிடர் பால் டம்ளரை வைத்துவிட்டு எழுந்தார். வாசல் தாண்டும்போது கால் இடறியது. தடுமாறிக்கொண்டு கீழே விழப்போனவர் வெளியில் வாசலுக்கு நேரே இருக்கும் துளசி மாடத்தில் மோதிச் சுதாரித்தார். அந்த சுதாரிப்பில் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து எண்ணெய் தரையில் சிதறியது.

அதே சமயம் ஐயர் மனது 'இது நல்ல சகுணம் இல்லையே' என்றும் பதற ஆரம்பித்தது!

# 5

'ஆண்கருவும் பெண் கருவும் சேர்ந்து ஒரு உயிர் கருவாக உருவாகிறது. ஒரு உடலாக அது மெல்ல வளர்கிறது. ஒரு தாவரம் போல் வளரும் இந்த உடலுக்குள் கருவறைக்குள் இனி வளர முடியாது என்கிற ஒரு நிலையும் அதற்கான அவஸ்தையும் தோன்றும்போது அது கருவறையையே எதிர்த்து வினை புரிகிறது. இந்தச் செயல்தான் பிரசவம். அது கருப்பையை விட்டு வெளியே வந்து விழுந்த நொடி வெளிக்காற்றை எப்பொழுது முதலில் இழுக்கிறதோ அதுதான் இந்த உலகில் அது பிறந்த முதல் ஆரம்ப நொடி. அந்த நொடிப் பொழுதின் பின்னே பஞ்சபூதத் தொடர்பும் ஒன்பது கிரகங்களின் பிணைப்பும் இருக்கிறது.'

-கௌசிக் ஆச்சார்யா

**ஊ**ருக்கு வெளியில் இருந்தது அந்த பாழடைந்த பங்களா! மனித நடமாட்டம் அறவே இல்லை. எங்கு பார்த்தாலும் செடி கொடிகள் புதர்கள்! ஓரிடத்தில் இடுப்பு உயரத்திற்கு பாம்புப் புற்றும் இருந்தது.

பங்களாவைச் சுற்றி ஒரு காம்பவுண்டுச் சுவர் செங்கற்களால் கட்டப்படாமல் கருங்கற்களால் சுண்ணாம்பு காரையால்

கட்டப்பட்டிருந்ததில் அதன் பழமையை ஊகிக்க முடிந்தது. காலம் அதை அங்கங்கே இடித்துத் தள்ளியிருந்தது. அப்படி இடிந்து கிடந்த இடங்களில் எல்லாம் ராட்சஸத்தனமாய் காட்டுச் செடிகள், தாவரவியல் படிப்பவர்கள் வந்தால் சுண்ணாம்பு காரையில் செடிகள் வேர்விடும் அதிசயத்தைப் பார்த்து நிச்சயம் ஆராய்ச்சி செய்வார்கள்.

காரை தொலைவில் நிறுத்திவிட்டு இறங்கி வந்திருந்த அனு சகலத்தையும் ஒரு பார்வை பார்த்தாள். கூட வந்திருந்த பரமு "சினிமாக்காரங்க கண்ணில் இன்னும் இந்த வீடு படலைபோல இருக்கு..." என்று முணுமுணுத்தான்.

"அதான் இல்லே. இங்க ஷூட்டிங் நடத்த சில சினிமாக் கம்பெனிக்காரங்க வந்தாங்களாம். ஆனா அவங்களால நிம்மதியாக படம் பிடிக்க முடியலை. பயந்து போய் ஓடிட்டாங்க..." என்று பரமுவின் கருத்துக்கு எதிராக கருத்தைச் சொல்லிவிட்டு அனுபமாவைப் பார்த்தான் ராஜாமணி. அனு அதைக் கேட்டுவிட்டு ஒரு கடி ஜோக்குக்கு சிரிக்கும் அளவு சிரித்தாள். ராஜாமணிக்கு அது எரிச்சலைத் தந்தது.

"சரிய்யா உனக்கு இங்க ஆவி இருக்கறது எப்படிய்யா தெரியும்?" பரமு விடுவதாக இல்லை.

"பரமு! இந்த கேள்வியெல்லாம் அப்புறம் முதல்ல ஆவி தரிசனம்" என்று அவனை நறுக்கினாள் அனு.

"இருங்கம்மா.. நான் ஒரு சிகரெட்டை பத்தவைக்கறேன். அப்புறம் பாருங்க என் உதட்டுல இருந்து எவ்வளவு ஆவிங்க வருதுன்னு..." என்று ஒரு சிகரெட்டை எடுத்து இதழில் சொருகிக் கொண்டு தீப்பெட்டியைத் தேடினான், பரமு.

ராஜாமணிக்கு நடுத்தலையில் ஆணி அடித்த மாதிரி ஒரு வலி.

"இதோ பாருங்க... இப்படி கிண்டல் பண்ற வேலையெல்லாம் வேண்டாம். ஒரு நாள் சரியான மழை. ஊரெல்லாம் வேற கரண்ட் கட்! மெயின் ரோட்டுக்கு அந்த பக்கத்துல இருக்குது ராஜவல்லிபுரம்கற கிராமம். அந்த ஊருக்குப் போறதா நினைச்சுகிட்டு நான் இந்த பக்கம் வந்துட்டேன். என் டூவிலரோட ஹெட்லைட் வெளிச்சத்துல இந்த பங்களாவோட ஒரு போர்ஷன் தெரிஞ்சிச்சு. அதோ அந்த இடம்தான்." ராஜாமணி கையை நீட்டி பங்களாவின் முன் வராண்டாவை காட்டினான். பளபளப்பான கிரானைட் கல்லில் உருவாகியிருந்த வராண்டாவை ஒட்டி பெரிதாக திண்ணை.

சட்டென்று ஒதுங்க தோதான இடம். 'சரி இது யாரோ குடி இருக்கற பங்களா போல'ன்னு டூவீலரை முன்னால நிறுத்திவிட்டு வராண்டாவுல போய் நின்னேன்."

"அப்படிங்களா... அப்புறம்?"

"அங்க போய் நின்னபிறகு தான் தெரிஞ்சிச்சு அங்க யாரும் இல்லைன்னு...."

"எப்படி... ஞானதிருஷ்டில தெரிஞ்சுதா

போச்சா?"

"இந்த லொள்ளுதானே வேண்டாங்கறது அங்க பாருங்க. வாசக்கதவு திறந்து கிடக்குது. அது வழியா உள்ள போய் யாராவது இருக்காங்களான்னு பார்த்தேன்."

"இருட்டுல பார்த்தீங்களாக்கும்... பலே... அப்புறம்?"

"அனு மேடம்! இந்த ஆளை கொஞ்சம் நம்பிக்கையோட நான் பேசறத கேட்கச் சொல்லுங்க. நானும் சிகரெட் புடிப்பேன். பாக்கெட்ல லைட்டர் இருந்துச்சு. எடுத்து பத்தவெச்சுகிட்டு 'ஹலோ...!யாருங்க உள்ளே?'ன்னு... சத்தம் போட்டேன். உள்ள இருந்து பதிலே இல்லை. சுத்தி சுத்தி வந்தேன். திரும்புன பக்கமெல்லாம் ஒரே தூசு தும்பு. நூலாம்படை! வௌவாலுங்க வேற... பக்குன்னு ஆயிப்போச்சு... வந்துபாருங்க..."

-ராஜாமணி பதிலோடு முன்னால் நடந்தான். ஏதோ பாக்கெட்டுக்குள் கையை விட்டுக்கொண்டான். பரமுவும் அனுவும் அதை கவனித்தார்கள்.

எதுவும் பேசாமல் பின்னால் நடந்தார்கள். காலடிபட்டு சருகுகள் சப்தம் போட்டன. அனுவின் துப்பட்டாவை முன் செடிக்கிளை ஒன்று எனக்கு வேண்டும் என்று இழுத்தும் பார்த்தது. பரமு அந்த கிளையை தன் கைவசம் உள்ள பேனா கத்தியால் வெட்டிவிட்டு அவளுக்கு உதவி செய்தான்.

சினிமாவாய் இருந்தால் இந்த மாதிரி

காட்சியின்போது ஒரு மாதிரி சப்தம் போட்டு காற்று ஒன்று ஊளையிடுகிறது மாதிரியெல்லாம் ஒலி எழுப்பி ஒளியையும் கூட்டி குறைத்து பீதியை உருவாக்கி விடுவார்கள்.

ஆனால் நிஜத்தில் அப்படி எல்லாம் எதுவும் ஆகவில்லை.

வராண்டா முன்வரை சென்ற ராஜாமணி சற்று தேங்கி நின்றாள். அவன் உதடு ஹார்மோனியக் கட்டை போல் எதையோ முணுமுணுத்து துடிப்பது தெரிந்தது.

அவனை சமீபித்து வராண்டாவில் ஏறி நின்றனர். பரமும் அனுவும்...

"என்ன பண்றே...? மந்திரம் சொல்றியா?"

பரமு கேட்டான்.

"ஆமாம்" என்று தலையை மட்டும் ஆட்டினான் ராஜாமணி.

"பய நம்மை எல்லாம் நம்பவைக்க ஆனாலும் ரொம்பதான் கஷ்டப்படறான்.." என்று அனுபமாவிடம் முணுமுணுத்தான் பரமு. அவள் கண்ணாலேயே அவனை எதுவும் பேசாதே என்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்தாள் ராஜாமணியையும் அருகே அழைத்தாள்.

'இங்க எங்க அந்த ஆவியை படம் எடுத்தீர்கள்?"

"உள்ளே மேடம்.. உள்ளே ஒரு ஊஞ்சல் இருக்கு. அது மேல அது உக்காந்துகிட்டிருந்தது..."

"எங்க காட்டுங்க பார்ப்போம்..

"காட்றேன்.. ஒரு நிமிஷம்!" என்றவன் பாக்கெட்டில் இருந்து விபூதிப் பொட்டலம் ஒன்றை எடுத்தான். அனுபமா எதிரில் நீட்டினான்.

"எதுக்கு?"

"இட்டுக்குங்க...

"ராஜாமணி! ரொம்பவும் ட்ராமா போடுறீங்க. நீங்க எனக்கு இதுல எல்லாம் நம்பிக்கை கிடையாது. உள்ளே வங்க... எங்க இருக்கு அந்த ஊஞ்சல்?"

"மேடம்! நீங்களே உள்ளே போங்க. எல்லாம் தெரியும். நான் இதுக்கு மேல வரமாட்டேன். ஒரு தடவை நான் ரிஸ்க் எடுத்து உயிர் பிழைச்சதே பெரிசு..."

"யோவ்.. இதுதான் நீ ஆவியைக் காட்ற லட்சணமா?" - பரமு சீறினான்.

"கத்தாதீங்க சார். ஆவியென்ன சுண்டைக்காயா இல்ல மரத்துல தொங்கற மாங்காயா...? இதோ பாத்துக்குங்கன்னு காட்ட? அலையற சமாச்சாரம் சார். தைரியமா உள்ள போங்க, பாருங்க. அதிர்ஷ்டம் இருந்தா உயிரோடு வாங்க... வராட்டி எனக்கு கவலையில்லை. உங்க ஆசிரியர்கிடட உங்க சாவையே ஒரு சாட்சியா வெச்சிடுவேன். ஞாபகத்துல வெச்சுக்குங்க..." ராஜாமணி திடீரென்று வந்த தைரியத்துடன் மிரட்டுவது போலப் பேசினான்.

பரமுவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. "சரி வாங்க மேடம். உள்ளாற

போவோம். எதுக்கும் ஒரு சவுண்டு கொடுப்போம். இந்தமாதிரி இடங்கள்ள திருட்டுப் பசங்க, கேப்மாரிங்க ஒளிஞ்சுக்கிட்டிருப்பாங்க. அவங்கதான் ஆவி வேஷம் போட்டு யாரையும் இந்த பக்கம் வரவிடாம செய்துகிட்டிருப்பாங்க. நிஜ ஆவிங்கள விட இவங்கதான் அதிக ஆபத்தானவங்க...” என்ற பரமு “ஹலோ யாருங்க உள்ள....?” என்று ஒரு கத்து கத்தினான். சப்தம் உள்ளே சென்று பயங்கரமாக எதிரொலித்தது.

சில வெளவால்கள் அந்த சப்தம் கேட்டு படபடவென்று மெயின் கதவு வழியாக வெளியேறியும் சென்றன. ஆனால் வேறு எதிரொலிகள் இல்லை.

அனுபமா தலையை சரித்துக்கொண்டு உள்ளே பார்த்தாள். சுமாரான வெளிச்சம். கைக்கடிகாரத்தில் மணி நான்கு! பார்த்துக் கொண்டே உள்ளே கால் வைத்தாள். மைதா மாவு போல வழவழப்பாக தரையெல்லாம் ஈஷியது நூலாம்படையில் சிலந்திகள் பனைநுங்கு போல் கொழுத்திருந்தன. அந்த காலத்திய வீடு என்பது அங்குலத்துக்கு அங்குலம் தெரிந்தது.

பல இடங்களில் கதவுகள் பெயர்த்து களவாடப்பட்டிருந்தன. அங்கெல்லாம் மேற்குச் சூரியனின் கிரணக் கோடுகள்!

அனுபமா ஹைஹீல் செருப்பு அணிந்திருந்தாள். குதிங்காலுக்கு கீழே ஒண்ணரை அங்குலத்துக்கு கூர்மையாக இருந்தது. ஒவ்வொரு அடிக்கும் அந்த

கூர்மையான பாகம் 'டெ டொக்' என்று சத்தம் போட எதிரொ ந தினுசாக கேட்டது.

"அவனவன் வீடுவாசல் இல்லாம திண்டாட்றான். நான் சைதாப்பேட்டைல கொசுக்களுக்கு நடுவுல குருவி சைஸ் ஒரு சிங்கிள் பெட்ரூம் ஃப்ளாட்ல செத்துகிட்டிருக்கேன். இங்க பாத்தீங்களா மேடம். எவ்வளவு பெரிய வீட்டை எனக்கென்னன்னு போட்டுட்டு போயிருக்கறதை...!"

-பரமு கமெண்ட் அடித்தபடியே சுற்றிப் பார்த்தான் ராஜாமணி வாசலிலேயே நின்று விட்டான்.

"அந்தப் பயல பார்த்தீங்களா மேடம். பயப்படற மாதிரி நடிச்சுகிடு வெளியவே நின்னுட்டான்..."

"பேசாம வா பரமு... நாலாபக்கமும் நல்லா பார்.. படம் எடு. இது பேசற நேரமில்லை."

"பேசாட்டி என்னையே நீங்க பேயா நினைச்சுடுவீங்க மேடம். காட்டுல தனியா போறவங்க பாடிகிட்டு போவாங்களாம். அந்த மாதிரி தான் இங்க நானும் பேசிக்கிட்டிருக்கேன்..."

—பரமு பேச்சோட ஃப்ளாஷை உருவாக்கி அந்த வீட்டின் பாகங்களை படம் எடுத்துக் கொண்டான். மகா பெரிய வீடு... தலையில் மார்பிள் கற்கள்! சுவர்களில் முட்டையும் சுண்ணாம்பும் உருவாக்கிய வழவழப்பு.

தலைகால் மரச் சட்டங்களில் ஏராள

செதுக்கல்கள்- கலை ரூபங்கள்!

"இன்னிக்கெல்லாம் சுத்தம் பண்ணி கொஞ்சம் செலவு பண்ணா ஒரு கோடிக்கு குறையாது." என்று பரமு ஒரு இடத்தைப் பார்த்து கொஞ்சம்போல மிரண்டான்.

கோழியின் வெட்டி எறிந்த தலை பாகம் மட்டும் கிடந்தது. உடம்பைக் காணவில்லை. அருகில் சுவரில் ரத்தத் தீற்றல்கள்!

"மேடம் அங்க பாருங்க.. காட்டினான்.

"பாத்தேன்... யாரோ கோழி அறுத்துருக்காங்க...

"தலை இருக்கு. உடம்பைக் காணோமே"

"தலையை வெச்சுகிட்டு பிரியாணி சமைக்க முடியாதில்லையா?"

"சாதாரணமாகக் கேட்டாள் அனுபமா. துளிகூட பயம் பதட்டம் படபடப்பு இல்லாமல் இருந்தாள். பரமுவே அதற்காக ஆச்சரியப்பட்டான்.

உள்ளே கொஞ்சம் புழுங்கியதால் அவளது ஆடையை மீறி வியர்த்ததில் உள் பாகங்கள் நன்கு தெரிந்தன.

பரமுவும் வாலிபப் பிராயத்தில் இருந்ததால் பார்வை அந்த பாகங்களில் கள்ளத்தனமாய் போய்ப்போய்நின்றது. அதை ஒரு கட்டத்தில் தெரிந்து கொண்ட அனுபமா துப்பட்டாவால் மூடிக் கொண்டு அவனை முறைத்தாள்.

"சாரி மேடம்!"

"சரி போய் அந்த ஆளை உள்ற கூப்பிட்டுகிட்டுவா..."

"இதோ..." பரமு வெளியே சென்றான். ராஜாமணி நின்று கொண்டு 'காக்கக் காக்க கனகவேல் காக்க..." என்று சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஹலோ மிஸ்டர்.. உள்ளே வருவீங்களாம்."

"நானா...?"

"இல்ல... உங்க தாத்தா பாட்டி அத்தனை பேரும். வாய்யான்னா..."

ராஜாமணி தயங்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

"பயங்கற பீலா பார்ட்டியா நீ... எங்கய்யா ஆவி? கூப்பிடுய்யா. இப்பவே காட்டு நாங்க முழுசா ஒரு ரவுண்ட் அடிச்சிட்டோம்..."

பரமு போட்டுத் தாக்கினான். ராஜாமணி மிரள மிரள பார்த்துக் கொண்டே அனுபமாவை நெருங்கினான். அவள் கண்களிலேயே கேள்வி இருந்தது. பதிலுக்கு முழித்தான்.

"மிஸ்டர் ராஜாமணி! நாங்க ரெடி... இப்ப நீங்கதான் உங்க வார்த்தைப்படி நடத்துகிட்டாகணும்.." என்றாள். அனுபமா.

"மேடம் இங்கதான்... இதோ அந்த ஊஞ்சல்லதான் நான் அந்த ஆவியைப் பார்த்தேன். போட்டோவும் எடுத்தேன்.."

"சரி இப்ப எங்க காணோம்...?"

"ஒரு வேளை மேட்னிஷோ சினிமாவுக்கு

போயிருக்குமோ?" மறுபடியும் பரமுவிடம் கிண்டலான கமெண்ட்.

"யோவ் வாயை மூடுய்யா... நான் சொல்றது சத்தியம்.. இங்கதான் பார்த்தேன். உயிரைப் பணயம் வெச்சு படமும் எடுத்தேன். இப்ப அது கண்ணுல படலைன்னா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"-அலறினான் ராஜாமணி.

மீண்டும் உள்பாக்கெட்டுக்குள் கையைவிட்டு கொண்டான்.

"ஆமா ஏன் பாக்கெட்டுக்குள்ள பாக்கெட்டுக்குள்ள கையை, விட்டுக்கறே?" -பரமு அசராமல் கேட்டான். ராஜாமணி கையை வெளியே எடுத்தான். அவன் உள்ளங்கையில் ஒரு எலுமிச்சம் பழம்!

"ஃபூ இவ்வளவு தானா?"

"மந்திரிச்ச பழம் ஸார். இது இருக்கறதாலதான் அந்த ஆவி என்னை எதுவும் செய்யல. தெரிஞ்சுக்குங்க."

"புடலங்கா.. இப்ப எங்க அது?"

"நான்தான் சொன்னேன்ல... நான் படம் மட்டும்தான் எடுத்தேன். மத்தபடி ஆவிகளோட டைமிங்லாம் எனக்குத் தெரியாது."

"ராஜாமணியும் பரமுவும் மாறி மாறி கத்திக் கொண்டார்கள். இருந்தும் ராஜாமணி மிரண்டுபோய் சுற்றிச் சுற்றி பாாப்பதை அனுபமா கவனிக்கத் தவறவில்லை.

அவன் நடிக்கிற மாதிரி தெரியவில்லை. அவளுக்குள் இப்போது புதிதாக ஒரு

எண்ணம், ஆவி என்று இவன் வேறு எதையாவது படம் எடுத்துவிட்டானா?

சந்தேகத்தோடு தோளில் தொங்கிய ஹேண்ட் பேக்கை திறந்து உள்ளே கவரில் அடைப்பட்டுக் கிடந்த புகைப்படத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் ஒரு முழு உருவமும் புகைபோல தெரிந்தது. காற்றில் ஒரு வெள்ளைச்சீலை பறக்கும்போது அதன் வளைவுகள் மடிப்புகள் சமயங்களில் மனித உருவம் போல தெரியும் வாய்ப்புக்கள் உண்டு.

அப்படி எதாவது இருந்து அதைத்தான் இவன் புகைப்படமாக எடுத்துவிட்டானா?

அனுபமாவுக்கு எண்ணங்கள் கூடுகட்டும்வேளை பரமு எட்டிப்பார்த்தான்.

"என்ன மேடம்...படத்தைப் பாக்கறீங்க?"

"ஒண்ணுமில்லை. சும்மா பார்த்தேன்.." - அனுபமா மிடறுகூட்டி சமாளித்தாள்.

நடுவில் அவளது செல்போன் கமறியது.

காதைக் கொடுத்தாள்.

எடிட்டர் பேசினார்.

"என்னம்மா ஒண்ணும் பிரச்சினை இல்லையே"

"ஒண்ணுமில்ல சார்.. நாங்க இப்ப அந்த பாழடைஞ்ச பங்களாவுல தான் இருக்கோம்."

"பார்த்தும்மா எனக்கு கொஞ்சம் பயமா இருக்கு..."

"பயந்தா எப்படி சார் இந்த கேரியர்ல குப்பை கொட்ட முடியும்?"

"அப்படி இல்லாமா ரிஸ்க் எடுக்கறதுக்கும் ஒரு அளவு இருக்கு.. அதுல விவேகம் ரொம்ப முக்கியம்"

"என்ன சார்... எதுக்கு இவ்வளவு பீடிகை...?"

"அங்க பேய் இருக்கு...அது உன்னை அடிச்சிடும்கற பயம்லாம் எனக்கில்லம்மா. சில மனுஷப் பேய்ங்க இருந்து எதாவது பண்ணிட்டா என்ன பண்றதுங்கற பயம்தான்..."

"மனுஷப் போய் இருந்தா நான் முதல்ல உங்களுக்குப் போன் பண்ணிட்டு இந்த நிமிஷம் கிளம்பி வந்துருப்பேன் சார்... கவலைப்படாதீங்க."

"சரி.. இப்ப அங்க என்ன நிலைமை?"

"ஒண்ணும் இல்லை. ஒரு பாழடைஞ்ச வீடு...அதுக்குள்ள நின்னுகிட்டு ஜாலியா பேசிகிட்டு இருக்கேன். பரமு கலாட்டா பண்ணிகிட்டு இருக்கார்."

"அந்த ராஜாமணி...

"அவரும் கூட இருக்கார், அவர் மட்டும் நிஜமாலுமே பயந்துகிட்டிருக்கார் சார்.."

"அந்த போட்டோவோட ரிசல்ட் ஜஸ்ட் இப்பதான்மா வந்தது?"

"என்ன சார்.. நிபுணர் என்ன சொல்றார்?"

"நிச்சயமா அந்த போட்டோ பைரஸி இல்லம்மா, அதுல தகிடுதித்தம்லாம் இல்ல. ஆவி உருவம்னு ஒண்ணு

இருந்து எடுத்தா என்ன ரிசல்ட் வருமோ அதுதான் போட்டோல இருக்குன்னு சொல்லியிருக்கார்..."

"அப்ப போட்டோ பொய் சொல்லலை. ஆனா அந்த உருவம் தற்செயலான ஏதோ ஒண்ணா இருக்கலாம் இல்லையா?"

"எப்படி"

"மேகச் சித்திரங்கள் மாதிரி சமயத்துல வானத்துல மேகங்கள்ல அற்புதமா ஓவியம் வரைஞ்ச மாதிரி சில உருவங்கள் தெரியுமில்லியா அந்த மாதிரி..."

"அதுக்கு அங்க ஸ்கோப் இருக்கா...?"

"அதைத்தான் பாத்துகிட்டிருக்கேன். புழுதி திரைச்சிலை, இல்லை புகைன்னு ஏதாவது உள்ள தெரிஞ்சு அதை இந்த ராஜாமணி புகைப்படமா எடுத்திருக்கலாமில்லியா?"

அனுபமா கேட்டுக்கொண்டே நடந்து சென்று ஊஞ்சலில் அமர்ந்தாள். காலால் தரையை எத்திவிட ஊஞ்சல் சப்தமிட்டபடி ஆடியது. காலை எத்தியதில் புழுதி கிளம்பி மூச்சடைத்து தும்மலும் கீச்சு கீச்சு சப்தமும் சேர்ந்து கொண்டது.

"என்ன சப்தம்மா...?"

"ஒண்ணுமில்ல... ஊஞ்சல்ல உக்காந்து காலை எத்தினேன். புழுதி கிளம்பி ஒரே தும்மல்..."

"சரிம்மா.. கவனமா எல்லாத்தையும் நோட் பண்ணிக்கிட்டு வந்துசேர்."

"கவலைப்படாதீங்க. எதுக்கும் இன்னிக்கு ராத்திரி இங்க தங்கியிருந்துட்டு

காலைல நாங்க வந்து சேர்றோம்..

"ராத்திரி தங்கற ரிஸ்க்கெல்லம் வேண்டாம் நீ வந்துடு. நான் நம்ம பிரகாஷை அனுப்பறேன்.."

"பிரகாஷ் தங்கலாம், நான் தங்கக் கூடாதா?"

"அப்படி இல்லம்மா.. என்ன இருந்தாலும் நீ ஒரு பெண்.. உனக்கு தைரியம் இருந்தாலும் எனக்குன்னு சில கட்டுப்பாடுகள் உண்டு. நாளைக்கு என்னை யாரும் கேள்வி கேட்கக்கூடாது பார்.."

"இப்படி சொன்னதுக்காகவே இன்னிக்கு நான் உறுதியா தங்கப்போறேன். ஒரு ஆண் தங்கலாம், பெண் தங்கக் கூடாது. அவ வீக்கர் செக்ஸ்னு நீங்க நினைக்கறது ரொம்ப தப்பு சார்"

"பெண்கள் எதுலையும இளைச்சவங்க கிடையாது. தெரிஞ்சுக்குங்க.."

அனுபமா போனை முடக்கி விட்டாள். அவள் பேசியதன அத்தனை விபரங்களும் பரமுவின் காதிலும், ராஜாமணியின் காதிலும் விழுந்திருந்தன.

இருவரும் இரவு தங்கப் போவதை நினைத்து அவளை மிரமிரள பார்த்தனர்.

"என்ன மிஸ்டர் ராஜாமணி... என்ன முழிக்கிறீங்க..."

"நான் புலி வாலை பிடிச்சிட்டேன்னு நினைக்கறேன் மேடம்.."

"எப்படி...?"

"போனதடவை இங்க வந்து போ(ன)...

எடுத்தபோது பெரிசா சாதிக்கப் போகறோம்கற ஒரு எண்ணம்தான் இருந்தது. ஆனா அது இப்படி வம்புல மாட்டி விடும்னு நான் நினைக்கல."

"இங்க தங்கறதுல உங்களுக்கும் அவ்வளவு கஷ்டம் இருக்கா?"

"இல்லையா பின்னே... வாழணும்கற ஆசை இருக்கறவன் நான். ஆனால் நான் தொட்ட விஷயம் ஒரு பூமராங்கா மாறி என்னையே தாக்க வருதே இப்போ.."

"அப்ப அந்த போட்டோ பொய்னு ஒத்துக்குங்க கிளம்பிடலாம்.."

"அது.. அது...

"என்ன அது வந்து போயி"

"சரி மேடம்.. அது பொய்தான். பணத்தாசைல நான் ஒரு நாடகம் போட்டதாகவே இருக்கட்டும். வாங்க முதல்ல கிளம்புவோம்."

-ராஜாமணி பரபரத்தான். வெளியேறவும் காலெடுத்தான். அனு சிரித்தாள்.

"இது சிரிக்கற இடமில்ல மேடம். யார் செஞ்ச புண்ணியமோ நாம உயிரோட இருக்கோம். வாங்க போயிடலாம்..."

"பேய்தான் இல்லையே... எதுக்கு இந்த டயலாக்கலாம்?"

"சரி மேடம்... நான் தப்பா பேசிட்டேன். கிளம்பிவாங்க போகலாம்..."

-ராஜாமணி சொல்லிக்கொண்டு அந்த பாழடைந்த மாளிகையின் வாயிலையும் தாண்டி விட்டான்.

பரமுக்கு குழம்பியது.

"மேடம். என்ன மேடம் இவன் பண்றான்? நீங்களும் ஏதேதோ சொல்றீங்க...

"அவர் நிஜமாலுமே பயப்படறார் பரமு. அவர் வேணும்னா போகட்டும். நாம இங்க தங்கறோம்?" அழுத்தமாய் சொன்னாள் அனுபமா.

"அதான் நான் பொய் சொல்லிட்டேன்னு சொல்றான்ல... இன்னும் எதுக்கு இங்க?"

"இல்ல பரமு.. அவர் பொய் சொல்லலை. பயத்துல ஏதேதோ பேசறார். சம்திங்... இங்க வேற ஏதோ நடத்துருக்கு அதை தெரிஞ்சுக்கவாவது நாம இங்க தங்கணும்."

"வேண்டாத வேலை மேடம். நாம் போகறதுதான் நல்லது..."

"அப்ப நீ வேணாம் போ... நான் வர மாட்டேன். இன்ஃபாக்ட் இங்க வரும்போது கூட நான் இப்ப அந்த மனநிலைல இல்ல. இங்க தங்கி நான் வந்த காரியத்தை நூறு சதவிகிதம் முடிச்சுக்காம வரமாட்டேன். நீ போகலாம்.."

அனுபமா அழுத்தமாக சொல்லிவிட்டு அவனைப் பார்த்தாள்.

பரமு தர்மசங்கடத்தோடு வெளியே போய் எட்டிப் பார்த்தான்.

ராஜாமணியைக் காணவில்லை. அவன் ஓடிவிட்டிருந்தான்.

# 6

'உயிர் பற்றிய ஆராய்ச்சியை நான் செய்யக் காரணமே விக்கிரமாதித்தியன் கதைதான். இதில் தான் கூடுவிட்டு கூடுபாய்வது பற்றி படித்தேன். நிச்சயம் இது ஒரு அழகிய கற்பனையாக இருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறேன். கூடுவிட்டு கூடு பாய்வதில தான் உயிர் என்றால் என்ன என்பதன் ரகசியம் ஒளிந்துள்ளது.

***-கௌசிக் ஆச்சார்யா***

இருட்டத் தொடங்கிவிட்டது.

பூஜை அறையில் விளக்கு ஏற்றி விழுந்து வணங்கி விட்டு வெளியே வந்து ஹாலில் உள்ள பிரம்பு நாற்காலியில் அமர்ந்தாள் சிவகாமி. கழுத்து அனிச்சையாக திரும்பி கடிகாரத்தைப் பார்த்தது. மணி ஆறு! சிரசாசனம் செய்யும் ஒரு மனிதனைப்போல் முட்கள்.

இந்த நொடி அனு வந்திருப்பாள்.

அவளது ஸ்கூட்டி மெயின்டோரைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் சப்தம் கேட்டபடி இருக்கும்.

இன்று ஆளைக் காணோம். அதிக வேலை இருந்தால் சில சமயங்களில் வரத் தாமதமாகும். அப்பொழுதெல்லாம் போன் செய்வாள். இன்று போன் கூட

செய்யவில்லை.

சிவகாமியை கவலை ஆக்கிரமிக்கப் பார்த்தது.

அதை அகற்ற வந்தவர் போல எடிட்டர் ராம்நாத்தின் கார் அனுவின் வீட்டு வாசலில் வந்து தேங்கி நின்றது. தும்பைப் பூ போல வேட்டி சட்டையுடன் அதன் ஒரு நுனியைப் பிடித்தபடி சற்றே மூக்கில் ஏற்றிய பொடியின் மணம் கமழ உள்ளே நுழைந்தார் ராம்நாத்.

"வாங்க..."

"நல்லா இருக்கீங்களாம்மா...?"

அவரும் உட்கார்ந்தார். சிவகாமி மரியாதையாக நின்று கொண்டாள்.

"எதுக்கு நிக்கறீங்க.. நீங்களும் உட்காருங்க."

"இருக்கட்டும். ஆமா அனு உங்க கூட வரலியா?"

"இல்லம்மா. அவளைப் பத்தி பேசிட்டு போகத்தான் வந்தேன்."

— ராம்நாத் சொல்லவும், சிவகாமி முகத்தில் ஒரு வித பரபரப்பு.

"அவளைப் பத்தின்ன உடனே என்னவோ ஏதோன்னு நினைக்கறீங்க போல இருக்கு. பயப்படும்படியா ஒண்ணுமில்லை. உங்க பொண்ணு இன்னிக்கு வீட்டுக்கு வர மாட்டா. நாளைக்கு காலைல தான் வருவா..?"

"ஏதாவது புது அசைன்மெண்ட்டா?"

"ஆமாம்மா.. இதை, அசைன்மெண்ட்டுன்னு சொல்றத விட

அவளுக்கான ரிசைன்மென்ட்டுன்னு கூட சொல்லலாம்.”

ராம்நாத் குரலில் கவலை தொனித்தது.

“புரியலியே...

“உலகத்துல பொட்டிக்கடை நடத்தலாம். தெருவுல வாழைப்பழம் கூட விக்கலாம். ஆனா பத்திரிகையாளனா மட்டும் வரவே கூடாதும்மா...”

“எதுக்கு இத்தனை சலிப்பு?”

அவர் ராஜாமணியில் ஆரம்பித்து, அனு ரோஷப்பட்டுக் கொண்டு பாழடைந்த பங்களாவில் தங்கிவிட்டது வரை சொல்லிமுடித்தார்.

சிவகாமி முகத்தில் ஏராளமான சலனம்.. மிகத் தாராளமாய்..

“நான் தப்பு பண்ணிட்டேன். இந்த மாதிரி இரண்டும் கெட்டான் விஷயத்துல எல்லாம் உங்க பெண்ணை இறக்கி விட்டிருக்கக் கூடாது. இப்ப கிடந்து மனசு அடிச்சுக்குது..”

“சரி... என்ன செய்யப் போறீங்க?”

“நானும் இப்ப அந்த பங்களாவுக்குத் தான் போறேன். கூடவே இருந்து காலைல அவளை பத்திரமா கூட்டிகிட்டு வந்து விட்டுடறேன். இதை சொல்லிவிட்டு போகத்தான் வந்தேன்.”

“வேண்டாம்.. நீங்க போக வேண்டாம். அவளுக்கு ஒண்ணும் ஆகாது” திடீரென்று சிவகாமி இன்ப அதிர்ச்சி அளித்துப் பேசினாள்.

"என்னம்மா சொல்றீங்க.. அவளுக்கு ஒண்ணும் ஆகாதுன்னு எந்த நம்பிக்கைல சொல்றீங்க?"

"காத்து கறுப்பெல்லாம் இந்த ஊரு உலகத்துக்கு வேணும்னா இரண்டும் கெட்ட விஷயமா இருக்கலாம். என் வரைல அது ஒரு உன்னதமான விஷயம். இறந்து போறவங்க ஆவியா மாறி அவங்க செய்த புண்யபாவத்துக்கு ஏற்ப செயல்பட்றதை நான் பல கட்டங்கள்ள உணர்ந்திருக்கேன். நான் உணர்ந்த மாதிரியே எல்லாரும் உணர்ந்தா நல்லா இருக்கும்னு நான் அடிக்கடி நினைக்கறது உண்டு. இப்ப அப்படி ஒரு அனுபவம் அனுபமாவுக்கு ஏற்படப் போகுதுன்னா அதுக்கு நான் சந்தோஷப்பட்றேன்.."

"அது நல்லவிதமா இருந்துட்டா பிரச்சினையில்லை. அதுவே மோசமா... உயிருக்கே ஆபத்தா முடிஞ்சுட்டா என்ன பண்றது..?"

"வாஸ்தவம்தான். ஆனா அனுவுக்கு உயிருக்கு கேடா எதுவும் நடக்காது. அவ கூடவே அவங்க அப்பா எப்பவும் இருக்கார். அவர் பார்த்துப்பார்."

சிவகாமி பளிச்சென்று பதிலோடு திரும்பி சுவரில் புகைப்படமாய் தொங்கும் கணவனின் மாலையிடப்பட்ட படத்தைப் பார்த்தாள்.

ராமநாத்துக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவர் ஏதேதோ நினைத்துக் கொண்டு வந்தார். இங்கே நிலைமை மிக நார்மலாகவே இருக்கிறது.

எப்படி இத்தனை பெரிய விஷயத்தை இந்தப் பெண் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்?

ஆச்சரியப் பிடுங்கலுடன் அவரிடம் அடுத்தடுத்து கேள்விகள்.

"அப்படின்னா பேய் பிசாசு இருக்குங்கறது உங்க முடிவா?"

"நிச்சயமா...

"இந்த விஷயம் மட்டும் எப்பவும் நம்பிக்கை சார்ந்த ஒண்ணாவே இருக்கு. இதுக்கு ஆதாரங்களே இல்லை. என்னைப் போல பத்திரிகை நடத்தறவங்களுக்கு அப்பப்ப இந்த மாதிரி சில விசித்திரமான போட்டோக்கள் வந்து சர்ச்சையை உருவாக்குது. நாங்களும் ஒரு சுவாரஸ்யத்துக்காக பத்திரிகை வியாபாரத்துக்காக இந்த மாதிரி பிரச்சினையை முடிஞ்சவரை அலசறோம் அவ்வளவுதான். இப்படி இருக்கும்போது நீங்க உறுதியா நம்பறது ரொம்ப ஆச்சரியமா இருக்கு"

— ராம்நாத் தெளிவாக தன் கருத்தை எடுத்து வைத்தார்.

சிவகாமி கமுக்கமாக அதை கேட்டுக்கொண்டு அர்த்த புஷ்டியோடு சிரித்தாள். ராம்நாத்துக்கு அந்த சிரிப்பு சின்ன இகழ்ச்சியாக கூடப்பட்டது.

"என்னம்மா சிரிக்கிறீங்க.. உங்க பொண்ணு இந்த மாதிரி விஷயத்துல அவ்வளவும் பொய்னு சொல்ற இடத்துல இருக்கா. நீங்க அவ்வளவும் உண்மைன்னு

சொல்றீங்க. எப்படி?"

"இளவயசு.. விஞ்ஞான பாதிப்பு. அப்படித்தான் சிந்திப்பா, பேசுவா, ஆனா வாழ்க்கைல அனுபவம்தான் நிதர்சனமான விஷயம். அப்படி அனுபவப்படும்போது அவளுக்கும் எல்லாம் புரிஞ்சிடும்."

"இப்ப நீங்க அனுபவப்பட்டவங்கதானே... அதைச் சொல்லுங்களேன்."

"வந்த இடத்துலையே பேட்டியா?"

"பத்திரிகையாளன்கறவன் தூங்கும் போது ஒரு கனவு கண்டா அதுல கூட தனக்கு ஏதாவது விஷயம் கிடைக்காதான்னு பேனா மூடியைத் திறந்துடுவான். ஆனா நான் இப்ப கனவு காணலை. நீங்க சொன்னதை வெச்சு ஒரு சாதாரண மனுஷனா அவனுக்கே உண்டான க்யூரியாசிட்டியோட தான் இந்த கேள்வியைக் கேட்கறேன். உங்க அனுபவம் எப்படிப்பட்டது?"

"அதை நான் சொன்னா நீங்க நம்பமாட்டீங்க சார்.."

"சொல்லுங்க.. பிறகு முடிவுக்கு வரேன்!"

"அனு வயித்துல இருக்கும்போதே அவங்க அப்பா இறந்து போயிட்டார். அகாலமரணம். ஒரு விபத்துல அவர் உயிர் பிரிஞ்சிடிச்சு. அவர் உயிரோட இருந்த போது தனக்கு மகள் தான் பிறப்பான்னும், அவளுக்காக தான் ஒரு தங்கச் சங்கிலி வாங்கி போடப்போறதாவும் சொல்லிக்கிட்டிருப்பார். அப்படிப்பட்ட வர்

இறந்து ஒரு மாசம் கழி நான் அனு பிறந்தா. நான் கூட பிரசவ மயக்கத்துல இருந்து கண் திறக்கல. அப்ப ஒருத்தர் வந்து அனுவோட கழுத்துல ஒரு தங்கச் சங்கிலியை போட்டு முத்தம் கொடுத்துட்டு போனதா நர்ஸ் சொன்னா. நான் யாரோ வெல்விஷர்னு நினைச்சு சாதாரணமா விட்டுட்டேன். அதே நர்ஸ் வீட்டுக்கு வந்து என்னை விட்டுட்டு போனப்ப அனு அப்பா புகைப்படத்தைப் பார்த்து வாயைப் பொளந்துட்டா. இவர் எப்ப இறந்தார். இவர்தான் அன்னிக்கு வந்து அனு கழுத்துல தங்கச் சங்கிலிய போட்டுட்டு போனதா அவ சொன்னப்போ நான் ஆடிப்போயிட்டேன்."

சிவகாமி தன் அனுபவ நம்பிக்கையை சற்று கண்ணீருடன் சொல்லிவிட்டு ராம்நாத்தைப் பார்த்தாள். அவரிடம் பெரிதாக பாதிப்பில்லை. அவளுக்கும் புரிந்தது.

"வந்தவர் அனுவின் அப்பா ஜாடை கொண்டவராக இருக்கலாம். அதை அந்த நர்ஸ் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். இந்த மாதிரி நிறைய கதைகளை கேள்விப்பட்டிருக்கிறேன்." என்பதுபோல அவருக்குள் நினைவுகள், முடிவுகள்!

"நம்ப முடியலை இல்லை!"

"ஆமா, இந்த மாதிரிதான் நானும் நிறைய கேள்விப்பட்டேன். ஒரு சங்கிலியைப் போடவந்தவர் அதுக்கு பிறகு

ஏன் வரலை? உங்களை ஏன் பார்த்துப் பேசலை?"

"அதுக்கு பல காரணங்கள் இருக்கலாம்."

"இது நமக்கு நாமே சொல்லிக்கற சமாதானம்மா. சரி.. உங்க நம்பிக்கையை நான் எதுக்கு அசைச்சுப் பாக்கணும். வாழ்க உங்க நம்பிக்கை! நான் புறப்பட்றேன். அனுவை பத்ரமா காப்பாத்தி கொண்டுகிட்டு வர்ற பொறுப்பு எனக்கு இருக்கு... வரேன்!"

"உங்க வரைல இல்லாத பேய் பிசாசுக்கு எதுக்கு இப்படிப் பயப்படறீங்க.."

"நான் பேய், பிசாசு, ஆவி, பூதத்துக்கு பயப்படல. அங்க வேற யாராவது ரவுடிப்பசங்க இருந்துகிட்டு இந்த பேய், பிசாசு ட்ராமா போட்டு ஊரை ஏமாத்திக்கிட்டிருக்கலாம் இல்லயா? அது தான் பயப்பட்றேன்."

"அப்படின்னா இவ்வளவு நேரம் நீங்க என்கூட பேசிக்கிட்டிருந்ததே தப்பு. உடனே புறப்படுங்க. ஆனால் ஒரு முக்கியமான விஷயம்."

"என்னம்மா?"

"அனுவுக்கு ஒரு நல்ல வரன் வந்துருக்கு. பையன் சங்ககிரில இருக்கார். கோயமுத்தூர் சொந்த ஊராம். இன்ஜினியர் மாப்பிள்ளை."

"இதை ஏம்மா முதல்லையே சொல்லலை. ரொம்ப சந்தோஷம் ஆமா.. அனுவுக்கு சம்மதா.....? அவ என்கிட்ட எதுவும் சொல்லலியே..."

"அவளுக்கே இனிமே தான் சொல்லணும். நான் போய் முதல்ல பையனைப் பாத்து பழக்க வழக்கமெல்லாம் எப்படின்னு தெரிஞ்சுகிட்ட பிறகு நிச்சயத்துக்கு போகலாம்ன்னு இருக்கேன்."

"முதல்ல அந்த காரியத்தைப் பாருங்க. நான் அனுவோட காலைல உங்களை பாக்கறேன். வரேன்." ராம்நாத் கும்பிட்டபடி புறப்பட்டார்.

சிவகாமியும வாசல்வரை சென்று வழியனுப்பிவிட்டு திரும்பிவந்து கணவன் படத்தருகே நின்றாள். கண்கள் கலங்க படத்தைப் பார்த்தவள் "உங்க மகளை ஜாக்ரதையா பாத்துக்குங்க. உங்களைத்தான் நம்பி இருக்கேன்" என்று முணுமுணுத்தாள்.

# 7

'இந்த உலகில் பிறந்த நாம் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள, இந்த உலகில் நாம் பாக்க முடிந்த- கேட்க முடிந்த விஷயங்களே உதாரணமாக இருக்கின்றன. நம் புலனறிவுக்கு உட்பட்ட இவைகளைக் கொண்டே எந்த ஒரு விஷயத்தையும் யோசித்துப் பார்க்கிறோம். கற்பனையும் செய்கிறோம். ஆனால் இது போதாது. நமது புலனறிவுக்கு எட்டாத விஷயங்களும் இந்த உலகில் உள்ளன. அதில் ஒன்று தான் உயிரின் ரகசியம்'.

***-கௌசிக் ஆச்சார்யா***

ராம்நாத் அந்த பங்களாவை அடைந்த போது முழுவதுமாக இருட்டி விட்டிருந்தது. தான் வரப் போவதை முன்பே செல்போனில் அவர் சொல்லியிருந்ததால் பங்களா வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான் போட்டோ கிராஃபர் பரமு. அவர் வந்து சேரவும் ஒரு மாதிரி பார்த்தான்.

“குட் ஈவினிங் ஸார்... என்றபடி அனுபமாவும் அவரை வெளியே வந்து வரவேற்றாள்.

ஒரு தற்காலிக ஏற்பாடாக தீப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டு எரிந்து கொண்டிருந்தது.

சுமாரான வெளிச்சம்.. சில வண்டுச் சப்தம்!

ராம்நாத் ஊடுருவிப் பார்த்தார்.

“எதுக்கு சார் இங்க நீங்க வநதீங்க?” - என்று சிணுங்க ஆரம்பித்தாள் அனுபமா.

“நீ உன் வீரத்தை காமிச்சுட்டே. நான் என் ரெஸ்பான்சிபிலிடியைக் காட்ட வேண்டாமா?”

“இங்க ஒரு பராப்ளமும் இல்லை. கரண்ட் இல்ல.. கொஞ்சம் கொசுக்கடி.. அவ்வளவுதான். மத்தபடி ஜாலியா இருக்கு.. ஆமா உங்க டிரைவர் எங்கே?” துப்பட்டாவை தலைக்கு உருமா போல கட்டிக் கொண்டு அவள் கேஷ்வலாக் பேசியது ராம்நாத்துக்கு அந்த நிலையிலும் துளி சிரிப்பைத் தந்தது.

இறந்து ஒரு மாசம் கழிச்சு நான் அனு பிறந்தா. நான் கூட பிரசவ மயக்கத்துல இருந்து கண் திறக்கல. அப்ப ஒருத்தர் வந்து அனுவோட கழுத்துல ஒரு தங்கச் சங்கிலியை போட்டு முத்தம் கொடுத்துட்டு போனதா நர்ஸ் சொன்னா. நான் யாரோ வெல்விஷர்னு நினைச்சு சாதாரணமா விட்டுட்டேன். அதே நர்ஸ் வீட்டுக்கு வந்து என்னை விட்டுட்டு போனப்ப அனு அப்பா புகைப்படத்தைப் பார்த்து வாயைப் பொளந்துட்டா. இவர் எப்ப இறந்தார். இவர்தான் அன்னிக்கு வந்து அனு கழுத்துல தங்கச் சங்கிலிய போட்டுட்டு போனதா அவ சொன்னப்போ நான் ஆடிப்போயிட்டேன்."

சிவகாமி தன் அனுபவ நம்பிக்கையை சற்று கண்ணீருடன் சொல்லிவிட்டு ராம்நாத்தைப் பார்த்தாள். அவரிடம் பெரிதாக பாதிப்பில்லை. அவளுக்கும் புரிந்தது.

"வந்தவர் அனுவின் அப்பா ஜாடை கொண்டவராக இருக்கலாம். அதை அந்த நர்ஸ் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். இந்த மாதிரி நிறைய கதைகளை கேள்விப்பட்டிருக்கிறேன்." என்பதுபோல அவருக்குள் நினைவுகள், முடிவுகள்!

"நம்ப முடியலை இல்லை!"

"ஆமா, இந்த மாதிரிதான் நானும் நிறைய கேள்விப்பட்டேறேன். ஒரு சங்கிலியைப் போடவந்தவர் அதுக்கு பிறகு

ஏன் வரலை? உங்களை ஏன் பார்த்துப் பேசலை?"

"அதுக்கு பல காரணங்கள் இருக்கலாம்."

"இது நமக்கு நாமே சொல்லிக்கற சமாதானம்மா. சரி.. உங்க நம்பிக்கையை நான் எதுக்கு அசைச்சுப் பாக்கணும். வாழ்க உங்க நம்பிக்கை! நான் புறப்பட்றேன். அனுவை பத்ரமா காப்பாத்தி கொண்டுகிட்டு வர்ற பொறுப்பு எனக்கு இருக்கு... வரேன்!"

"உங்க வரைல இல்லாத பேய் பிசாசுக்கு எதுக்கு இப்படிப் பயப்படறீங்க.."

"நான் பேய், பிசாசு, ஆவி, பூதத்துக்கு பயப்படல. அங்க வேற யாராவது ரவுடிப்பசங்க இருந்துகிட்டு இந்த பேய், பிசாசு ட்ராமா போட்டு ஊரை ஏமாத்திக்கிட்டிருக்கலாம் இல்லயா? அது தான் பயப்பட்றேன்."

"அப்படின்னா இவ்வளவு நேரம் நீங்க என்கூட பேசிக்கிட்டிருந்ததே தப்பு. உடனே புறப்படுங்க. ஆனால் ஒரு முக்கியமான விஷயம்."

"என்னம்மா?"

"அனுவுக்கு ஒரு நல்ல வரன் வந்துருக்கு. பையன் சங்ககிரில இருக்கார். கோயமுத்தூர் சொந்த ஊராம். இன்ஜினியர் மாப்பிள்ளை."

"இதை ஏம்மா முதல்லையே சொல்லலை. ரொம்ப சந்தோஷம் ஆமா.. அனுவுக்கு சம்மதா.....? அவ என்கிட்ட எதுவும் சொல்லலியே..."

"அவளுக்கே இனிமே தான் சொல்லணும். நான் போய் முதல்ல பையனைப் பாத்து பழக்க வழக்கமெல்லாம் எப்படின்னு தெரிஞ் சுகிட்ட பிறகு நிச்சயத்துக்கு போகலாம்ன்னு இருக்கேன்."

"முதல்ல அந்த காரியத்தைப் பாருங்க. நான் அனுவோட காலைல உங்களை பாக்கறேன். வரேன்." ராம்நாத் கும்பிட்டபடி புறப்பட்டார்.

சிவகாமியும வாசல்வரை சென்று வழியனுப்பிவிட்டு திரும்பிவந்து கணவன் படத்தருகே நின்றாள். கண்கள் கலங்க படத்தைப் பார்த்தவள் "உங்க மகளை ஜாக்ரதையா பாத்துக்குங்க. உங்களைத்தான் நம்பி இருக்கேன்" என்று முணுமுணுத்தாள்.

# 7

'இந்த உலகில் பிறந்த நாம் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள, இந்த உலகில் நாம் பாரக்க முடிந்த- கேட்க முடிந்த விஷயங்களே உதாரணமாக இருக்கின்றன. நம் புலனறிவுக்கு உட்பட்ட இவைகளைக் கொண்டே எந்த ஒரு விஷயத்தையும் யோசித்துப் பார்க்கிறோம். கற்பனையும் செய்கிறோம். ஆனால் இது போதாது. நமது புலனறிவுக்கு எட்டாத விஷயங்களும் இந்த உலகில் உள்ளன. அதில் ஒன்று தான் உயிரின் ரகசியம்'.

**-கௌசிக் ஆச்சார்யா**

ராம்நாத் அந்த பங்களாவை அடைந்த போது முழுவதுமாக இருட்டி விட்டிருந்தது. தான் வரப் போவதை முன்பே செல்போனில் அவர் சொல்லியிருந்ததால் பங்களா வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான் போட்டோ கிராஃபர் பரமு. அவர் வந்து சேரவும் ஒரு மாதிரி பார்த்தான்.

"குட் ஈவினிங் ஸார்... என்றபடி அனுபமாவும் அவரை வெளியே வந்து வரவேற்றாள்.

ஒரு தற்காலிக ஏற்பாடாக தீப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டு எரிந்து கொண்டிருந்தது.

சுமாரான வெளிச்சம்.. சில வண்டுச் சப்தம்!

ராம்நாத் ஊடுருவிப் பார்த்தார்.

"எதுக்கு சார் இங்க நீங்க வநதீங்க?" - என்று சிணுங்க ஆரம்பித்தாள் அனுபமா.

"நீ உன் வீரத்தை காமிச்சுட்டே. நான் என் ரெஸ்பான்சிபிலிடியைக் காட்ட வேண்டாமா?"

"இங்க ஒரு பராப்ளமும் இல்லை. கரண்ட் இல்ல.. கொஞ்சம் கொசுக்கடி.. அவ்வளவுதான். மத்தபடி ஜாலியா இருக்கு.. ஆமா உங்க டிரைவர் எங்கே?" துப்பட்டாவை தலைக்கு உருமா போல கட்டிக் கொண்டு அவள் கேஷ்வலாக பேசியது ராம்நாத்துக்கு அந்த நிலையிலும் துளி சிரிப்பைத் தந்தது.

"அவனைக் காரோட திருப்பி அனுப்பிட்டேன். அதுசரி இது என்ன ஆம்பளமாதிரி உருமா கட்டிகிட்டு?"

"உருமாங்கறது ஆம்பளைக்குன்னு யார் சொன்னா?"

"சரி... இனி உன்கிட்ட பேச முடியாது. நீ மேல் சாவனிஷம் கீழ் சாவனிஷம்னு ஆரம்பிச்சுடுவே. ஆமா எங்க அந்த ராஜாமணி?"

"ஓடியே போய்ட்டான் சார். சரியான தொடை நடுங்கி"

"ஆவிக்கு பயந்து ஓடிட்டானா? இல்லை உங்களுக்கு பயந்தா...?"

"அதை ஒரு விசாரணைக் கமிஷன் வெச்சுதான் கண்டுபிடிக்கணும். கைல மந்திரிச்ச எலுமிச்சம் பழம், விபூதி, குங்குமம்னு பயங்கர செட்டப்போட தான் கூடவந்தான். அதோ அந்த ஊஞ் சல்ல தான் ஆவி உக்கார்ந்திருந்ததாம். அவனும் போட்டோ எடுத்தானாம். சரி இப்ப எங்கய்யா அந்த ஆவின்னு கேட்டா முழிக்கறான். ஒருவேளை மேட்னி சினிமா பார்க்க போயிடிச்சோ என்னவோன்னு நான் கூட கமெண்ட் அடிச்சேன்."

-பரமு ராம்நாத்திடம் உரிமையோடும், இணக்கத்தோடும் சொல்லிமுடிக்க ராம்நாத் தாடையை தடவினார்.

உள்ளே இறங்கி சுற்றிப் பார்க்கத் தொடங்கினார். கையில் தீப்பந்தத்துடன் பரமுவும், அனுபமாவும் பின். தொடர்ந்தனர். அங்கங்கே தூசு பறந்தது. கூடவே வௌவால்கள் 'கக்கர பிக்கர'

என்று சப்தமிட்டன.

"அட்டகாசமான பங்களா சார்... இப்படி அநியாயத்துக்கு போட்டு வெச்சிருக்காங்க."

"ஏதாவது காரணம் இருக்கும்...

"என்ன சார் புடலங்கா காரணம். மனுஷன் இப்ப சுடுகாட்டிலையே வீடு கட்டி குடியிருக்கான். இங்க இப்படியா போட்டு வைப்பாங்க..."

"அதை நீ சொந்தக்காரன் கிட்ட கேட்கணும். என்கிட்ட கேட்டா..?"

"சும்மா சொன்னேன் சார். என்னோட அடுத்த என்கொயரி அது தான்.. இப்படி போட்டுவைக்கறதுக்கு பேசாம எனக்கு ஒரு விலைக்கு கொடுத்துடுங்கன்னு கேட்கப் போறேன்"

"அப்ப இனிமே இதுதான் உன் வீடுன்னு சொல்."

"இது வீடா சார்.... பங்களான்னு சொல்லுங்க."

"சரி.. இனி இந்த பங்களாவுல இருந்துதான் வரப்போறேன்னு சொல்லு."

"ஆமாம் சார். நான் முடிவு பண்ணிட்டேன்."

"நம ஆபீஸ்க்கு பக்கத்துல திருவல்லிக்கேணில இருக்கும்போதே தினமும் லேட்டா ஆபீஸ் வரே. இங்க இவ்வளவு தூரம் வந்துட்டேன்னா வாரம் ஒரு தடவை தான் வேலைக்கு வருவேன்னு சொல்" - ராம்நாத் ஜாலியா ஜோக்கடித்தார்.

"க்ளுக்"கென்று அதைக் கேட்டு அனுபமா சிரித்தாள். பரமுவும் அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

ஒரு பயங்கரமான இடத்தில் இருக்கின்ற உணர்வே துளிகூட அவர்களிடம் இல்லை!

விடிய விடிய அப்படியே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு விடிந்த பின் மூவரும் வெளியில் வந்தனர்.

சோம்பல் முறித்த பரமு "அந்த ராஜாமணியை தேடிப் போய் பார்த்து உதைக்கணும்." என்றபடியே காரில் ஏறப்போனான்.

"அவனை எதுக்கு உதைக்கணும்கறே.. அவனுக்கு நன்றிதான் சொல்லணும்" என்றாள் அனுபமா.

இருவரையும் ஆச்சரியப்பார்வை பார்த்தார் ராம்நாத்.

"என்ன சார் பாக்கறீங்க, இல்லேன்னா உங்களோட இப்படி ஃப்ரீயா பேசிகிட்டிருக்கிற ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்குமா?."

"அப்ப நான் உங்ககிட்ட ஃப்ரீயா பேசாதவனா?"

"அப்படி இல்லை சார்... எப்பப்பார் அந்த பேட்டி, இந்த கட்டுரைன்னு பத்திரிகை தொடர்பாகத்தானே நாம பேசிக்கிட்டிருந்துருக்கோம். இன்னிக்கு பாருங்க எவ்வளவு விஷயம் பேசியிருக்கோம்?"

"அதானே... அதுவும் ஒரு ஆவி

மாளிகைல.. அனுபமா கண் சிமிட்டியபடி திரும்பி அந்த பங்களாவைப் பார்த்தாள்.

எனக்கென்ன என்று அதுவும் பார்த்தது. கார் புறப்பட்டது.

சில அடிதூரம் கூட உருண்டிருக்காது. ஆட்டுக்கூட்டம் ஒன்று வழிமறித்தது. கார் தேங்கி நின்றது.

ஆடு மேய்ப்பவன் ஆட்டை விரட்டாமல் காரை நெருங்கி வந்து கையில் கழியுடன் உள்ளே பார்த்தான்.

"ஏய் என்ன பாக்கறே... ஆடுங்கள விலக்கு" பரமு பாய்ந்தான்.

"விலக்கறேன் சாமி.. ஆமா இங்க எங்க போய்ட்டு வர்றீங்க?"

"ஏன்.. பதில் சொன்னாத்தான் ஆட்டை விலக்குவியா?"

"இல்ல சாமி... பேய் பங்களா பக்கமா இருந்துவர்றீங்களே... அதான் கேட்டேன்.."

"அதுக்கு பேர் பேய் பங்களாவா?" அனு தலையை வெளியே நீட்டியபடி ஆவலாகக் கேட்டாள்.

"ஆமாங்கம்மா.. நீங்க கேள்விப்பட்டதில்லையா?"

"இல்ல ஆமா.. யார் பங்களா அது?"

"இப்ப அது யாருக்கும் சொந்தமில்லம்மா. அதுக்க சொந்தமான அவ்வளவு பேரும்தான் செத்துப் போயிட்டாங்கம்மா.."

"செத்துப் போயிட்டாங்களா?"

"உங்களுக்கு எதுவுமே தெரியாதா?"

அவன் கேள்விக்கு மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அனுபமா மீண்டும் ஆரம்பித்தாள்.

"அந்த பங்களா பத்தி கொஞ்சம் விபரமா சொல்றியா?"

"சொல்றேங்க. ஆனா இங்க வேண்டாம். பங்களாவை சுத்தி ஆவி நடமாட்டம் இருந்துகிட்டே இருக்கும். நான் பாட்டும் தையாவது சொல்லிவைக்க அதுக்கு எனனை பொட்டுன்னு அடிச்சுபுட்டா, அப்பால நான் வாயுல மூக்குல ரத்தம் கக்கிச் சாக வேண்டியது தான்.."

"அந்த மாதிரி யாராவது செத்துருக்காங்களா?"

"என்ன அப்படி கேட்டுட்டீங்க? எவ்வளவு பேர் அந்த மாதிரி செத்துருக்காங்க தெரியுமா?" அந்த ஆட்டுக்காரன் அதிர்ச்சியளித்தான். பிறகு ஆடுகளை விலக்கி வழிவிட்டு கண்மாயக் கரையில் காத்திருக்கச் சொன்னான்.

கண்மாய்க்கரை!

காத்து மரக்கிளைகளில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்தது. பக்கத்து கிராமத்து ஆடுமாடுகள் வேர் வரை புற்களைப்பிடுங்கி கரித்துக் கொண்டிருந்தன.

"எங்க இன்னும் அவனைக் காணோம்... என்றபடியே பரமு வந்த வழியைப் பார்த்தான்.

"இப்ப எதுக்கும்மா அவனைக் குடையறே..? அதான் அந்த பங்களாவுல

ஒண்ணும் இல்லேன்னு நமக்கு தெரிஞ்சு போச்சே...?" என்றபடியே மூக்குப் பொடியை எடுத்து ஒரு உறிஞ்சு உறிஞ்சினார் ராம்நாத்.

"என்ன சார் நீங்க.. ஒரு பத்திரிகையாளன் எந்த சின்ன விஷயத்தையும் அலட்சியப்படுத்தக் கூடாது. எதுல இருந்து வேணுமானாலும் உண்மைகள் தெரிய வரலாம்னு நீங்கதான சொல்லியிருக்கீங்க.. பதிலுக்கு அவரை மடக்கினாள் அனுபமா. அதே சமயம் அந்த ஆட்டுக்காரனும் வந்து சேர்ந்தான்.

"வாய்யா. உனக்காகத்தான் காத்துகிட்டிருக்கோம்." என்று வரவேற்றபடியே ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான் பரமு.

"அது சரி... நீங்கள்ளாம் யாரு..?"

"நாங்க பத்திரிகைக்காரங்க.."

"அப்படின்னா..?"

பத்திரிகைக்காரங்கன்னா தெரியாதா...? தினத்தந்தி, மாலைமுரசுன்னு பத்திரிகை பேர் கேள்விப்பட்டதில்லையா நீ?"

"ஓ.. டீ கடைல கிடக்குமே பேப்பரு. அதைச் சேர்ந்தவங்களா?"

"ஆமா... அந்த பங்களா பத்தி சொல்லு அது யாருக்கு சொந்தம்?"

"அது உடையப்ப முதலாளின்னு ஒருத்தருக்கு சொந்தங்க. அவர் வாங்குன கடனுக்கு அந்த பங்களாவை ஜப்தி செய்யப் பார்த்தாங்க. அதுக்கு இடம்

கொடுக்காம உடையப்ப முதலாளி குடும்பத்தோட அந்த பங்களாவுல தற்கொலை செய்துகிட்டார்"

"இதெல்லாம் எப்ப நடந்தது?"

"அது நடந்து ஒரு பத்து, பதினைஞ்சு வருஷம் இருக்கும்க."

"சரி.. அவர் செத்துட்டா என்ன...? வீட்டை கடனுக்காக எடுத்துக்க வேண்டியது தானே?"

"என்னங்க.. அதுக்குள்ற காலை வெச்சாலே யாரும் தான் உருப்பட்றதே இல்லையே...?"

"உருப்பட்றதில்லன்னா...?"

"அங்க போறவங்களுக்கு நடக்கக் கூடாத ஏதோ ஒண்ணு நடந்துடுதுங்க. சமயங்களல அங்க சுத்தற ஆவி அடிச்சு பலர் செத்தே போய்ட்டாங்கன்னா பாத்துக்குங்களேன்...!"

"அப்ப அங்க போய் யாரும் நல்லபடியா வெளியே வந்ததில்லையா?"

"எனக்குத் தெரிஞ்சு யாரும் வந்தது இல்லீங்க. அந்த பக்கமா ஆடுமாடுங்க மேயப்போனா அதுங்க கூட ஒழுங்காபால் கறக்காம சுணங்கிடுதுங்கன்னா பாத்துக்குங்களேன்!" என சிரித்தான். ஆனால் அவனிடம் 'நாங்கள் அங்கே தங்கிவிட்டுத்தான் வருகிறோம்' என்பதை மட்டும் சொல்லவில்லை. சொல்லப்பார்த்த பரமுவையும் தடுத்துவிட்டாள்.

காரில் திரும்பும்போது ஞாபகமாக அதற்கு பதில் சொன்னாள்.

"அவன் படிப்பறிவு இல்லாதவன், பயத்துல பல்வேறு காரணங்களுக்காக இறந்தவங்களை எல்லாம் ஆவி அடிச்சிட்டதா சொல்றான். அவனுக்கு நேரடி அனுபவம் எதுவும் கிடையாது. எல்லாம் மத்தவங்க சொல்றதுதான், கேள்விப்பட்றது தான்.

பொதுவுல இந்த மாதிரி விஷயத்துல உண்மை ஒரு சதமும், தொண்ணூத்து ஒன்பது சதம் கற்பனையும் பொய்யும் தான் இருக்கும். இப்ப நாம அதை அனுபவபூர்வமாக நேர்லையே பார்த்துட்டோம். இதைவிட நமக்கு என்ன வேணும்? விட்டுத் தள்ளுங்க..." — ராம்நாத் தெளிவான அவள் கருத்தைக்கேட்டு சற்று பிரமிப்பை வெளிக்காட்டினார். அதேசமயம் அவள் அம்மா சிவகாமி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

"அனு உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?"

"என்ன சார்?"

"உன் அம்மா ஆவியெல்லாம் உண்மைன்னு நம்பறாங்க..."

"அதனால என்ன சார்?"

"செத்துப் போன உன் அப்பா திரும்ப வந்து உனக்கு சங்கிலி போட்டு போனாராம்!"

"ஓ... அந்தக் கதையை அம்மா உங்கக்கிட்ட கூட சொல்லிட்டாங்களா?"

"அது கதையா...?"

"ஆமாம்... நான் அப்படித்தான்

நினைக்கறேன். யாரையோ அவங்க அப்பான்னு நினைச்சுட்டாங்க."

"அப்படித்தான் இருக்கணும், இருக்கவும் முடியும். கடவுள் நம்பிக்கை, அப்புறம் இந்த ஆவிங்க சமாச்சாரம், அப்புறமா இந்த ஜாதகம் ஜோசியம் இதெல்லாம் உண்டு இல்லைங்கற விஷயத்துக்கு நடுவுல தொங்கிகிட்டிருக்கற விஷயங்களாத்தான் இருக்கு..."

"தப்பு சார்.. அது தொங்கிகிட்டு இல்ல... நாம தான் குழப்பத்தோட அதை தொங்கவிட்டிருக்கோம். உண்மைல இதெல்லாம் இருக்க முடியாத விஷயங்கள். இருந்தா தங்கச் சங்கிலியை என் அப்பா ஏன் யாரும் பார்க்காதப்ப வந்து போட்டுட்டு போகணும்? நாலுபேர் இருக்கும்போது வரலாமே.... ஏன் இப்ப கூட நம் கண் எதிர்க்க வரலாமே?" கேட்டுவிட்டு சிரித்தாள். அந்த சிரிப்பு மிக அழகாக இருந்தது.

"அப்புறம உனக்கு கல்யாணமாமே?" - ராம்நாத் இறுதியாக அந்த விஷயத்தைத் தொட்டார்.

"அம்மா சொன்னாங்களா...?"

"ஆமாம்.. நல்ல வரன் வந்துருக்காம்..

"அவர்களுக்கு முதல்ல என்னை ஒரு ஆம்பளைகிட்ட வித்துடணும்."

"அப்படி இல்லம்மா.. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்துடணும்னு

ஆசைப்பட்றாங்க. இது தப்பா?"

"தெரியும். நீங்க அவங்களுக்குத்தான் வக்காலத்து வாங்குவீங்கன்னு நல்லா தெரியும்..."

"அப்ப நீ கல்யாணம் பண்ணிக்க போறியா இல்லையா?" பதிலுக்கு ஆமோதிப்போடு சிரித்தாள். என்னதான் ஆண் பிள்ளைபோல தைரியமும் சிந்தனையும் இருந்தாலும் திருமணப் பேச்செடுத்தவுடன் வெட்கம் அவளை ஆக்ரமிப்பதை ராம்நாத்தாலும் உணர முடிந்தது. அதை அவரும் ரசித்தார்.

# 8

'இந்த உலகத்தில் நமது சக்தி ஒரு எல்லைக்குட்பட்டது. அதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மிருகங்களை, பறவைகளை, புழு பூச்சிகளைப் பார்த்து அறிவில் மட்டுப்பட்ட ஜீவன்கள் அவை என்று கருதுகிற மாதிரி நம்மை, நம்மைவிட உயர்ந்த புலனறிவு கொண்ட ஜீவன்கள் கருதக்கூடும். அதற்கு வாய்ப்பிருக்கிறது."

***-கௌசிக் ஆச்சார்யா.***

ஆபீசுக்குள் நுழைந்த அனுபமாவை எல்லோருமே பாராட்டினார்கள். ப்ரிண்டிங் செக்ஷன் அய்யாசாமியும் வந்து பாராட்டினார்.

"உங்களுக்கு அசாத்ய தைரியம்மா...

"என்ன அய்யாசாமி... நான் என்ன வீரப்பனையா பாத்துட்டு வந்துருக்கேன், அசாத்ய தைரியம் அது இதுங்கறீங்க.."

"வீரப்பன் மனுஷம்மா.. அவனைப் பாக்கறது என்ன பெரிய விஷயம்? பேயும் பிசாசும் திரியற இடத்துல போய் தைரியமா ஒரு ராத்திரி தங்கிட்டு வர்றது சாதாரண விஷயமா என்ன?"

"பேயாவது, பிசாசாவது, வாயைக் கழுவுங்க, அதெல்லாம் பொய்னு சொல்ல வேண்டிய ஒரு பொறுப்பான பத்திரிகைல இருக்கீங்க நீங்க நீங்களே இப்படி பேசலாமா?"

அதற்குமேல் அய்யாசாமி எதுவும் பேசவில்லை. ஆனால் அவர் முகம் அவள் சொல்வதை ஒப்புக்கொள்ளவில்லை என்பதை நன்றாகக் காட்டியது. ஓசையின்றி விலகினார்.

லேஅவுட் ஆர்ட்டிஸ்ட் அரவிந்தன் நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆளுக்கு ஆள் அவளைப் பாராட்டுவது அவனை என்னமோ செய்து கொண்டிருந்தது.

அவன் மட்டும்தான், இன்னமும் அவளிடம் சென்று பாராட்டை தெரிவிக்கவில்லை. அதை யாரும் செய்யாத மாதிரி செய்து அவளை அசத்தி விடவேண்டும் என்று தீர்மானித்தவன், கூடவே அந்த பாராட்டோடு ஐ லவ் யூ என்று சொல்லிவிடவும் வழியைத் தேடிக் கொண்டிருந்தான். அப்பொழுது பார்த்து

கமறியது தொலைபேசி. எடுத்தாள்.

அவள் காதில் பாய்ந்தவள் சிவகாமிதான்.

"ஹலோ... வானவில் பத்திரிகை ஆபீஸா...?"

"யெஸ்...?"

"அங்க அனுபமா இருக்காளா...?"

"நீங்க...?"

"நான் அவளோட அம்மா சிவகாமி பேசறேன்.."

"ஓ.. மாமியார்... அரவிந்தனுக்கு ஜிவ்வென்று ஒருவித பரவசம் ஏற்பட்டது. மிகப் பணிவாக "இருங்க மேடம்.. அவங்களுக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்றேன்..." என்று அதற்காக முயற்சித்தான். ஆனால் ரிங் மட்டும் போனது ஆள் சீட்டில் இல்லை என்பது தெரிந்தது.

"அம்மா! அவங்க சீட்ல இல்லை. ஏதாவது முக்கிய விஷயமா? சொல்லுங்க.. நானே சொல்லிட்றேன்.."

"ரொம்ப சந்தோஷம்பா. அவளைப் பெண் பார்க்க மாப்ளை வீட்டுக்காரங்க இன்னிக்கு சாயந்திரமா வர்றாங்க... இப்பதான் தகவல் வந்தது. நேத்து மாதிரி எங்கையாவது பேய் பங்களாவுக்கு போயிடப் போறா. டயத்துக்கு வீட்டுக்கு வரச்சொல்லணும்." என்றாள். அரவிந்தன் முகம் இருண்டு போனது. சுதாரித்தான்.

"சரிம்மா நான் சொல்லிட்றேன்" என்று சமாளித்தவன் நெஞ்சில் விழுந்த குத்தாக அதை உணர்ந்தான். நிறைய நகம் கடித்தான். அவனது பலநாள்-

இல்லையில்லை பல வருட காதல் அநியாயத்துக்கு துடிக்கத் தொடங்கியது. கண்களில் கூட கண்ணீர் எட்டிப் பார்த்து விட்டது! மதியம் போல ராஜாமணி ஆபீசிற்கு வந்திருந்தான். பரிதாபமாக அனுபமா எதிரில் போய் நின்று அவளைப் பார்த்தான்.

அவள் அவனை விழுங்குவது போல் பார்த்தபடி லேஅவுட் செய்த ஒரு பக்கத்தைக் காட்டினாள்.

அதில் "ஆவிப் படம் ஒரு அப்பட்டமான பொய்!" என்கிற தலைப்புச் செய்தி.

"உங்க போட்டோவுக்கான என்னோட மறுப்பு இது" என்றாள்.

"நிஜமா உங்க கண்ணுக்கு அந்த ஆவி தெரிலியா மேடம்?" அவன் குரலில் சுரத்தே இல்லை.

"இப்படி அபத்தமால்லாம் கேள்வி கேட்காம உருப்படியா எதையாவது செய்து முன்னுக்கு வர்ற வழியைப் பாருங்க" அவள் குரலில் கணிசமான அளவு கோபம்.

"சத்தியமா நான் அந்த ஆவியைப் பார்த்தேன். ரிஸ்க் எடுத்தேன். நீங்க போய் பார்க்கும்போது அது கண்ணுல படலைங்கறதுக்காக அதை இல்லைன்னு அவசரப்பட்டு முடிவெடுத்துடாதீங்க.."

"மிஸ்டர் ராஜாமணி! தயவு செய்து வெளியில போறீங்களா?"

"மேடம்...

"ப்ளீஸ் கெட் அவுட். உங்களால எங்களோட எவ்வளவு நேரம் காலம் விரயம்

தெரியுமா? சவால் விட்றவங்க உயிரைப் பெருசா நினைக்கக் கூடாது. நீங்க ஒரு இரண்டும் கெட்டான். கெட் லாஸ்ட்!" அனுபமாவின் அலறலைத் தொடர்ந்து முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வெளியில் வந்தான் ராஜாமணி. பார்த்துக் கொண்டே இருந்தான் அரவிந்தன்!!

நடுவில் அனுபமாவின் அம்மா போன் செய்து சொன்ன செய்தி ஞாபகத்துக்கு வந்தது. கூடவே அவனது காதல் உணர்வுகளும் தாளமிடத் தொடங்கின. ஆனால் எழுந்து போய் அந்த தகவலை மட்டும் சொல்லத் தோன்றவில்லை! 'என் அனுவை எவனோ ஒருவன் வந்து பார்த்து திருமணம் செய்வதா? நோ..!"

ஒரு பிரிவியூ பாஸ் வந்து டேபிள் மேல் கிடந்தது. எடுத்துக் கொண்டு அனுபமா முன்போய் நின்றான் அரவிந்தன்.

"மேடம்..."

"சொல்லுங்க அரவிந்தன்!"

"இன்னுக்கு மணிரத்னம் சார் படம் பிரிவியூ இருக்கு. போகலியா நீங்க?"

"போகணுமான்னு யோசிக்கிறேன்."

"அவசியம் போங்க மேடம்.... காதலுககு எதிரான படம்னு கேள்விப்பட்டேன்." சொன்னபடியே மிடறு கட்டியவனை ஒரு மாதிரி பார்த்தாள் அனுபமா...

"பாக்கறேன். இன்னிக்கு இந்த வாரத்து ஃபாரம் கிளோஸ் பண்ற வேலை இருக்கு."

"அட நீங்க போங்க மேடம்... நான் பாத்துக்கறேன்.. திரும்பவும் அவனை

நிமிர்ந்து ஒரு குத்துப் பார்வை பார்த்தாள். அவன் நெளிந்தான். பிறகு "உங்க இஷ்டம்" என்றபடி விலகிப்போனான். அனுபமா நடுவில் எதற்கோ எழுந்து செல்ல, திரும்பவும் தொலைபேசி கூப்பிட்டது.

"வானவில் பதிரிக்கையா?"

"பின்ன கல்யாணப் பத்திரிகையா? சொல்லுங்க..."

"நான் சப் எடிட்டர் அனுபமா அம்மா பேசறேன்.."

"ஓ... அம்மா சொல்லுங்க!"

"என் மகள் வீட்டுக்கு புறப்பட்டுட்டாளா?"

"அவங்க.. அவங்க.. அப்பவே புறப்பட்டுட்டாங்களே."

"இன்னும் வீட்டுக்கு வரலை. இங்க மாப்பிள்ளை வீட்டுலருந்து கூட வந்துட்டாங்க."

"அப்... அப்படியா.. அவங்க புறப்பட்டு போய் அரை மணி நேரமாகுது!" கஷ்டப்பட்டு ஒரு பொய்யை சொல்லிவிட்டு நிமிர்ந்து அனுபமா அறையைப் பார்த்தான். நல்லவேளை அவள் இல்லை!

உள்மனசு 'அரவிந்தா, துரோகி... உனக்கு ஏண்டா இந்த எச்சி புத்தி?" என்று கத்திப்பார்த்தது.

"என் காதலுக்காக நான் எந்த அயோக்யத்தனமும் பண்ணுவேன்" என்று ஒரு குரல் அவன் மனவெளியில் எங்கிருந்தோ ஒலித்து அந்த உள்மனசை அடக்கியது!

# 9

'வாழ்வை நாம் வடிவமைத்துக் கொண்டு நமது புத்தியின் செயல்பாட்டின்படி அதை செலுத்துவதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மை அதுவல்ல! நம் வாழ்வு ஏற்கனவே திட்டமிடப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கத்தின் இயக்கம். இது தெரியாமல் நாம் நம் புத்தியை பெரிதாக நினைத்துக் கொண்டு அதைக் கொண்டு உலகைப் புரிந்து கொள்ள முயசிக்கிறோம். ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ரயில் வண்டிக்குள் ஓடாமல் நாம் அமர்ந்திருப்பது போன்றது தான் நம் வாழ்வும்...அறிவால் அறியமுடியாததுதான் வாழ்வு."

***-கௌசிக் ஆச்சார்யா***

இரவு மணி பத்து!

வீட்டு முன் ஸ்கூட்டி வந்து தேங்கும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் சிவகாமி.

முகம் கொள்ளாத தூக்கம்.

உள்ளே நுழையும் அனுபமாவை ஒன்றிரண்டு என்று மிரண்டு வழியும் கண்ணீர் துளிகளுடன் ஏறிட்டாள்.

"அம்மா.. ஏன் அழறே?"

"போடீஈஈ.." ஆவேசமாக.

"என்னம்மா.. எதுக்கு இந்த கோபம்?"

"கோபமா... கொலையே பண்ணிடுவேன். உனக்கு இந்த கல்யாணத்துல

இஷ்டமில்லைன்னா இஷ்டமில்லைன்னு சொல்ல வேண்டியது தானே?"

"என்ன சொல்றே?"

"மண்ணாங்கட்டி, நான் போன் பண்ணி மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இன்னிக்கு பெண் பார்க்க வரப்போறாங்கன்னு சொல்லியும் நீ வரலேன்னா என்னடி அர்த்தம்?"

"எனக்கு எதுவுமே தெரியாதும்மா... நீ எப்ப போன் பண்ணே...? யாருக்கு போன் பண்ணே?"

"உன் ஆபீசுக்கு.. உனக்கு தான் போன் பண்ணேன். நீ தான் எப்பவும் சீட்டுல இருக்கறதே இல்லையே. அதனால் போனை எடுத்தவங்கிட்ட விஷயத்தை சொன்னேன்."

"எடுத்தது யார்?"

"நான் பேரைக் கேட்கல, விஷயத்தை சொல்லிவிட்டு போனை வெச்சுட்டேன்."

"நிஜமாவா?"

"இதுல நான் பொய் சொல்ல என்னடி இருக்கு. உன் கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு நானும் ஜோசியர் மாமாவும் எவ்வளவு சிரமப்பட்டுக்கிட்டிருக்கோம். இதுல போய் விளையாடுவோமா?"

"சரிம்மா.. நடந்தது நடந்து போச்சு. நாளைக்கே நான் ஆபீஸ்ல நீ யாருக்கு போன் பண்ணேங்கறத கண்டுபிடிச்சு அவங்க காதைத் திருகறேன்... போனது போகட்டும் விடு!"

"போனது போகட்டும்னு விட இது என்ன ஆத்துவெள்ளமா இல்லை அறுவடை நெல்லா...? கல்யாண விஷயம்!"

"சரி என்னை என்ன பண்ணச்

சொல்றே?"

"நீ இதுல பண்றதுக்கு எதுவும் இல்லை. எனக்கு தான் இனி வேலை.. நாளைக்கே நான் மாப்பிள்ளை வீட்டுக்கு போய் நடந்ததை சொல்லி, திரும்ப பெண் பார்க்க ஏற்பாடு செய்துட்டு வறேன். அப்பதான் எனக்கு தூக்கம் வரும்."

—சிவகாமி நெஞ்சைத் தழைத்துக்கொண்டு சொன்னதைக் கேட்டு சிரித்த அனுபமா "நல்ல அம்மா நீ" என்றவளாக ஆடைமாற்றப் போனாள்.

சிவகாமி நேராக கணவன் படத்தருகே போய் நின்று புலம்ப ஆரம்பித்தாள்.

"என்னங்க. இது... முதல் முயற்சியே தட்டிப் போச்சே.. சங்கிலிய விட தாலி பெருசுங்க. அதுக்கே வந்த நீங்க இதுக்கு கூடவேல்ல இருக்கணும்." அவள் மருகுவதை ஆடை மாற்றிக் கொண்டு வந்த அனுபமாவும் பார்த்தாள், நெருங்கி வந்தாள்.

"ஆ ஊன்னா அப்பா படத்துகிட்ட போய் நின்னு புலம்பாதே. இப்ப என்ன ஆயிடிச்சு?"

"முதல் கோணல் முற்றும் கோணல்னு சொல்வாங்க அனு..."

"நம்ம சமூகத்துல பழமொழிகள் எல்லாமே கோணல்மா. அத முதல்ல புரிஞ்சுக்க.. கண்டவங்க கண்ட நேரத்துல உளறினதை எல்லாம் வெச்சு மனசைப் போட்டு குழப்பிக்காதே. அதான் நாளைக்கே போகப் போறேல்ல..."

"நீ சொன்னா சரிடா..."

உடைந்த குரலில் சொன்ன சிவகாமியை,

பாசத்தோடு அணைத்துக் கொண்டாள் அனு!

# 10

"உயிரைப் பற்றியும் அதன் போக்கு பற்றியும் கருட புராணம் தெளிவாகச் சொல்கிறது. கிறித்துவ மதம் கூட இறந்து உயிர்த்து வந்த யேசுநாதரைத்தான் கடவுளாகப் பார்க்கிறது. ஜைனத்துறவிகள் கூட உடம்பை அடக்கி உயிரை விடுவித்துக் கொள்ளத்தான் ஆசைப்படுகிறார்கள்.

உயிர் வரையில் உடம்பு, ஒரு சிறை. சிறைக்குள் இருக்கும் வரை அடங்கி ஒரு கைதிபோல கிடக்கும் உயிர் உடம்பில் இருந்து விடுபட்ட நிலையில் மிகுந்த பலத்தை அடைகிறது!'

**-கௌசிக் ஆச்சார்யா**

மறுநாள்!

ஆபீசுக்குள் நுழைந்த மறுவினாடியே ரிசப்ஷனிஸ்ட்டைத்தான் கூப்பிட்டாள்.

"அம்மா போன் பண்ணாங்களா?"

"ஆமாம் மேடம் நான் உங்க செக்ஷனுக்கு லைன் போட்டு கொடுத்தேன்."

"யார் எடுத்தது?

"லே— அவுட் ஆர்ட்டிஸ்ட்

அரவிந்தன்!"

"சரி நீங்க போங்க. அரவிந்தனை வரச் சொல்லுங்க."

அடுத்த ஐந்தாவது நிமிடம் அரவிந்தன் வந்து நின்றான்.

"என்ன அரவிந்தன், எப்படி இருக்கீங்க?"

"என்ன மேடம் புதுசா இருக்கு - விசாரிப்பெல்லாம்."

"இல்ல சும்மாதான் கேட்டேன். ஆமா எனக்கு போன் வந்தா சொல்லமாட்டீங்களா?"

"உங்களுக்க போனா?" அரவிந்தன் அசுரப் பொய்க்கு தயாரானான்.

"அப்ப நீங்க என் போன் காலை அட்டெண்ட் பண்ணலியா?"

"இல்ல மேடம், பண்ணா சொல்றதுக்கென்ன?"

"அப்ப ரிசப்ஸன்ல உங்களுக்கு லைன் கொடுத்ததா சொன்னதெல்லாம்...?"

"நம் செக்ஷன்ல நான் மட்டுமா இருக்கேன்? எவ்வளவு பேர் இருக்கோம். அவுங்கள்ல யாராவது எடுத்திருப்பாங்க. ஆமா.. யார் மேடம் போன் பண்ணினது..?"

"அது உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. நீங்க போகலாம்."

அவன் சொல்வதை நம்பாத முடிவோடு அவனை கத்தரித்தாள் அனுபமா. அவனுக்கும் அது புரிந்தது. கசங்கலுடன் வந்து சீட்டில் அமர்ந்தான். எது எப்படியோ முதல் முயற்சியே தன் வரையில் வெற்றியைத் தந்துவிட்டது போல தோன்றியது அவனுக்கு... இனி அடுத்து...?

சீட்டில் மும்முரமாக இருந்தவளை எடிட்டிர் ராம்நாத் அழைத்தார். எழுந்து போனாள்.

"என்னம்மா நேத்து பெண் பார்க்க வந்திருந்தாங்களாமே?" அக்கறையாகக் கேட்டார்.

"ஆமாம் சார்... இங்க யாரோ எனக்கு வேணும்னே தகவல் சொல்லாம விட்டுட்டாங்க..

"யாரோன்னா...? கமான்! உனக்கு யார்னு தெரியுமா?"

"வேண்டாம் சார். இதை பெரிசுபடுத்தாதீங்க விட்டுருங்க."

"யார்..? அந்த அரவிந்தனா?"

"விட்ருங்க சார்.. ப்ளீஸ்!"

அவன் கூட உன்னைக் காதலிக்கறதா கேள்விப்பட்டேனே. உண்மையா?"

"இது என்ன சார் கேள்வி அதுவும் என்கிட்ட இதை நீங்க அவர்கிட்டதான்

கேட்கணும்."

"என்னம்மா நீ. தூர இருக்கற எனக்கு இவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கு. நீ படுகேஷுவலா இதை எடுத்துக்கறே. அவன் பொறாமைல ஏதாவது செய்திருக்கலாம் இல்லையா?"

"அதெல்லாம் சீப்பை ஒளிச்சு வைச்சா கல்யாணம் நின்னுடும்னு நினைக்கற மாதிரியான சீப்பான செயல் சார். ஐ டோன்ட் கேர்..."

"சரி இந்த லெட்டரைப் பார்!" ராம்நாத் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

அன்புள்ள ஆசிரியருக்கு!

உங்கள் வானவில் பத்திரிகையில் ஆவிகள் தொடர்பாய் ஒரு புகைப்படமும், பின் அது தொடர்பாய் உங்கள் அனுபவக் கட்டுரையையும் கண்டேன்.

'ஆவியெல்லாம் பொய் - அப்படியெல்லாம் ஒன்றும் இருக்க முடியாது' என்று நீங்கள் விஞ்ஞான பார்வையோடு அதற்கு மறுப்பு வெளியிட்டிருப்பதையும் பார்த்தேன். அவ்வளவும் அபத்தம். உங்கள் துணை ஆசிரியர் ஒரு அவசர குடுக்கை, வாழ்க்கையைப் பற்றியோ இல்லை ஆத்மாவைப் பற்றியோ அவருக்கு என்ன தெரியும்?

கிணற்றுத் தவளை, தான் குடி

இருக்கும் நீர் நிலையைத்தான் உலகம் என்று கருதுமாம். அப்படித்தான் அவரும்... உங்கள் கட்டுரையைப் படித்துவிட்டு சமூகத்தில் இருப்பவர்கள் விழிப்பு என்கிற பெயரில் பாவம் செய்யப்போவதை நினைத்து கவலைப்படுகிறேன். மரணம் ஒரு தவிர்க்க முடியாத விஷயம். அதன் பின் ஆத்மா அடையும் நிலைகள் உலகம் அறிய வேண்டியவை. உலக வாழ்க்கை என்பது ஆத்மாவுக்கு அளிக்கப்படும் ஒருவித பயிற்சிதான்.

இந்தக் கருத்தை எவ்வளவோ ஆன்மீகப் பெரியவர்களும், ஞானிகளும் கூறிச் சென்றிருக்கிறார்கள். இது புரியாமல் ஆன்மாவின் மறுபக்கத்தை ஒரு புகைப்படத்தை வைத்து பொய் என்று கூறுவது அவசரமான அபத்தம்.

அவரை என்னிடம் அனுப்புங்கள். நான் ஆத்மாவை அவருக்குப் புரிய வைக்கிறேன்.

**இப்படிக்கு**
**மந்திரதந்திர எந்திர வித்தகர்**
**கௌசிக் ஆச்சார்யா.**

கடிதத்தைப் படித்தவள் சரேலென்று நிமிர்ந்தாள். "சார் நான் இப்பவே போய் இந்த ஆச்சர்யாவைப் பார்க்கறேன் சார். நான் தவளையா இல்லை இவர் தவளையாங்கறதை பார்த்துடுவோம்."

படபடத்தாள் அனுபமா.

"அவசரப்படாதே அனுபமா... கௌசிக் ஆச்சார்யா ஒரு பெரிய பண்டிதர். யாரோ ஒரு மூணாம் தர மனிதர் இல்ல"

"முதல் தரமான மனிதராவே இருக்கட்டும். எனக்கு அவர் ஆத்மாவை புரியவைக்கணும். நான் பாரதியோட ஜாதி.

எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே என் நோக்கம்கற வள்ளுவரோட வழியில போறவ நான்.."

"சந்தோஷம், உங்க மோதல் வாசக உலகத்துக்கு ஒரு நல்ல சுவாரஸ்யமான கட்டுரையைத் தந்தா சந்தோஷப்படுவேன். ஆல் த பெஸ்ட்!"

அனுபமா அப்போதே ஆச்சார்யாவை சந்திக்க புறப்பட்டுவிட்டாள். அதையும் பார்த்துக் ' கொண்டே இருந்தான் அரவிந்தன்.

அவள் கோபம் கூட அழகுதான்!

அவன் உள் மனது சொக்கி வழிந்திருந்தது.

# 11

'இறந்த ஒருவரது உடலைவிட்டு நீங்கிய உயிர் இறந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வரும். அதற்குக் காரணம் வாழ்வின் ஆசாபாசங்கள். இந்த வாழ்வின் ஆசாபாசங்கள் அவ்வளவு மோசமானவை. அது அப்பழுக்கு இல்லாத ஆத்மாவையே அழுக்காக்கி விடுகிறது. பல ஆத்மாக்கள் பந்த பாசம் காரணமாக தங்கள் உறவுகளையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. தங்கள் அன்புக்குரியவர்களையும் காத்து நிற்கின்றன. ஆனால் இது எதையும் உணராத மனிதர்கள் தங்கள் வாழ்வில் நடக்கும் அதிசயங்களுக்கு கடவுளும் அதன் அருளும் தான் காரணம் என நினைக்கின்றனர்.'

**-கௌசிக் ஆச்சார்யா**

**அ**ந்த நாளைய ஆஸ்ரமங்களைப் போலவும், இந்த நாளைய நவீன கட்டிடங்களைப் போலவும் இரண்டும் கலந்த ஒரு தனி ரகத்தில் இருந்தது கௌசிக் ஆச்சார்யாவின் ஜாகை!

உள்ளே அவரும் பூஜையில் இருந்தார்.

அனுபமா, உதவியாளரிடம் விசிட்டிங் கார்டைக் கொடுத்துவிட்டு சூழலைப் பதிவு செய்யத் தொடங்கினாள்.

சுவரெல்லாம் பழமொழிகள், 'இதைச்

செய்.. அதைச் செய், அப்படி இருக்காதே இப்படி இருக்காதே" என்று அதில் உபதேசங்கள்!

நடுவில் அவளுக்கு அழைப்பு வரவும் எழுந்து உள்ளே சென்றாள்.

"வா குழந்தை... இது ஆச்சார்யா.

"நான் குழந்தை இல்ல. வயசுப் பொண்ணு "As a Working woman" இது அனுபமா!

ஆரம்பமே அனல் பறந்தது. ஆச்சார்யா சிரித்தார்.

"என் கடிதம் உன்னை ரொம்ப யோசிக்க வைச்சிருக்குன்னு நினைக்கிறேன்."

"அப்படி எல்லாம் இல்லை. நீங்கதான் என்கிட்ட மாட்டிக்கிட்டதா நினைச்சேன்."

"சௌகர்யமா உக்காந்து பேசு. நீ என்ன பேசினாலும் எனக்கு கோபம் வராது"

"ரொம்ப சந்தோஷம்.. ஆவி, பேய், பிசாசுல்லாம் இருக்குன்னு சொல்றதுல உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆனந்தம்?"

"இருக்கறதை இருக்குன்னுதானே சொல்லணும்?"

"இருக்கு ன்னா கண்ணுக்குத் தெரியணுமே."

"காத்து கண்ணுக்கு தெரியலை. அப்ப அது இல்லையா?"

"கண்ணுக்குத் தெரியலேன்னாலும் அதை உணர முடியுதே.."

"இதையும் தாராளமாக உணரலாம்."

"எப்படி...? எங்க உணர்த்துங்க பார்க்கலாம்."

"உனக்காக நான் சாப்பிட்டா பசி அடங்குமா? நீதான் சாப்பிடணும்,

உணரணும்னா நீதான் அதுக்கு முயற்சி செய்யணும்.”

“பாழடைஞ்ச பங்களால போய், நாங்க என்ன செய்தோமாம்?”

“அங்க உனக்கு எதுவும் ஆகாதது நீ செய்த புண்ணியம்.”

“இதெல்லாம் பூச்சாண்டி, ஆத்மான்னா என்ன? முதல்ல அதைச் சொல்லுங்க...”

“உன் உடம்போட இயக்கத்துக்கு காரணமா இருக்கற உயிர்தான் ஆத்மா”

“சரி.. அது எப்படி உடம்பைவிட்டு நீங்கின நிலைல உடம்புல இருக்கும்போது செயல்பட்ட மாதிரி செயல்பட முடியும்?”

“உடம்புல இருந்ததை விடவும் கூடுதலா, அற்புதமா அது செயல்படும்.”

“அதான் எப்படி?”

“இந்த கேள்விக்கு பதில் உனக்கு ஏற்கெனவே கிடைச்சிருக்கலாம். இல்ல இனி கிடைக்கலாம். ஆனா அதை நீ புரிஞ்சுக்கறதுலதான் உன் சாமர்த்தியம் இருக்கு”

“உங்க பதில் ஒரு பேத்தல். என் கேள்விக்கு பொட்டுல அடிச்சமாதிரி பதில் சொல்ல உங்களால முடியலை”

“சொல்வேன். ஆனால் உனக்குத்தான் புரியாது.”

“இது அதைவிட பேத்தல். நான் புரிஞ்சுக்க தவிக்கற ஒருத்தி. இதை நீங்க புரிஞ்சுக்குங்க முதல்ல.”

“அது உண்மையா இருந்தா கட்டாயம் ஆத்மான்னா என்ன, அதோட பலம் எப்படிப்பட்டதுங்கறதை நீ புரிஞ்சுக்குவே.”

“எப்போ...?”

"கூடிய சீக்கிரத்துலையே....

"அப்ப நீங்க புரியவைக்கறதா சொன்னது...

"இப்ப அதைத்தான செய்துகிட்டிருக்கேன்."

"இந்த பல்டிக்கு பேர் புரிய வைக்கிறதா?"

"அவசரப்பட்டு வார்த்தைகள கொட்டாதே குழந்தை. ஆத்மா புரியணும்னா உடம்பு புரியணும், உடம்பு புரியாம நான் எது சொன்னாலும் உனக்கு புரியாது. முதல்ல உடம்பை புரிஞ்சுக்கோ. அப்புறமா வா ஆத்மாவை உனக்கு புரிய வைக்கறேன்."

"இது மூணாவது பேத்தல்! ஆத்மாவுக்கு உடம்புக்குள் என்ன சம்மந்தம்?"

"உடம்புலதானே ஆத்மா உயிரா இருக்கு"

"சரி இந்த உடம்பு பத்தி புரிஞ்சுக்க என்ன இருக்கு?"

"நிறைய இருக்கு, தலை, கழுத்து, கைகால்னு உறுப்போட, பேர் சொல்றதோ இல்லை கிட்னி, இதயம், நரம்பு, எலும்பு, தசை, ரத்தம்னு அடையாளம் காட்றதோ உடம்பை புரிஞ்சுக்கிட்டதா ஆயிடாது.

இந்த உடம்புக்குள்ள ஏகப்பட்ட யோக சக்திகள் இருக்கு. அது தெரியணும்."

"யோக சக்தின்னா?"

"ஒண்ணு சொல்றேன். விஞ்ஞான விதிப்படி மிகுந்த பாரமான இதைக்கொண்டு தக்கை மாதிரி காற்றுல் மிதக்கலாம்..."

"எங்க மிதந்து காட்டுங்க.. ஒரு போட்டோ எடுத்துக்கறேன்.."

"பத்திரிகையாளரா எல்லாத்துலையும்

செய்தியைத் தேடாம உண்மையைத் தெரிஞ்சுக்க. ஆத்மார்த்தமா முயற்சி செய் குழந்தை...”

“நான் உண்மையைத் தெரிஞ்சுக்கத்தான் இப்ப உங்களை மிதந்து காட்டச் சொன்னேன்.”

“சரி.. எந்த நிலையிலையும் போட்டோல்லாம எடுக்கக் கூடாது....”

“ஏன்..?”

“நான் பரபரப்புக்காக இதைச் செய்யலை. உனக்கு சில உண்மைகளை புரியவைக்கத்தான் செய்யப்போறேன்.”

–சொல்லிவிட்டு, ஆச்சார்யர் எழுந்திருந்து சற்றுத் தள்ளி விரிக்கப்பட்டிருந்த மான்தோல் ஒன்றின் மேல் போய் அமர்ந்தார். பின் பத்மாசனமிட்டு மூச்சுப் பயிற்சிக்குள் நுழைந்தார். அனுபமா அசராமல் அவரையே பார்த்தபடி இருந்தாள். விநாடிகள் நிமிடங்களையும் நிமிடங்கள் மணியையும் பிடிக்கும்போலத் தெரிந்தது.

அந்த சூழலில் ஒருவித நிசப்தம்.

அவரது அடி வயிறு கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி பின் முதுகோடு ஒட்டிக்கொண்டது போல அழுத்திக் கொண்டது. ஒரு கட்டத்தில் அவரது அமர்ந்த நிலையான உடல் அப்படியே மெல்ல மெலெழும்பத் தொடங்கியது.

அனுபமாவால் நம்ப முடியவில்லை என்பது அவளது அகண்ட விழிகளில் தெரிந்து போயிற்று. ஒரு பத்தடி உயரத்துக்கு எழும்பிய நிலையில் அப்படியே அந்தரத்தில் அமர்ந்திருந்தது அவரது உடல்.

ஆதாரம் இல்லாமல் காற்றில் இப்படி காலைக் கட்டிக் கொண்டு உட்கார

முடியுமா?

அனுபமாவிற்குள் ஆச்சரிய அலைகள்!

அவரும் மெல்ல கீழிறங்கி பின் பழையபடி ஆசனத்தில் அமர்ந்து கால்களை ஆசனத்தில் இருந்து பிரித்து எழுந்து நின்றார். அவளை புன்னகையுடன் பார்த்தார்.

அனுபமாவிடம் பேச்சு மூச்சில்லை.

"என்னம்மா மிரட்சியா இருக்கா?" அவர் கலைத்தார்.

"ஆ... ஆமாம்.. நான் இதை எல்லாம் கண்ணால பார்த்ததில்லை. கதைலதான் படிச்சிருக்கேன்."

"இப்ப பாத்துட்டே தானே?"

"ஆ... ஆமாம்!"

"என் சரிரத்தோட எடை நாற்பத்தைந்து கிலோ தான். நியூட்டனோட புவிஈர்ப்பு விசை தத்துவத்துக்கு எதிரா நான் செயல்பட்டதைப் பார்த்து அந்த தத்துவம் பொய்யின்னு முடிவுக்கு வந்துடாதே. அது ஆரம்பம். இது முடிவு...!"

"சரி.. இதுக்கும் ஆத்மாவுக்கும் என்ன சம்பந்தம்?"

"நிறைய இருக்கு அதுக்கு தான் உடம்பை புரிஞ்சுக்க சொன்னேன்! உடம்பு புரிஞ்சா எல்லாம் புரியும். உடம்பு புரிய யோகம் பழகணும்.."

"யோகாசனங்களைச் சொல்றீங்களா?" அனுபமா குரலில் சுருதி குறைந்து பணிவு தெரிந்தது.

"யோகாசனம் உடம்போட ஆரோக்கியத்துக்கும் சக்ர ஆதாரங்கள் ஒழுங்கா இயங்குவதற்கும் வழிகாட்டுது. அப்ப மனநிலையிலையும் மாற்றம் ஏற்படும்.

அப்ப மனசு வெளிய கேள்வி கேட்காது. உள்ள கேள்விகளை கேட்டுக்கும்."

"அப்படின்னா அப்பதான் ஆத்மா புரியுமா?"

"அப்படியும் சொல்லலாம்...

"அப்படின்னா அந்த பாழடைஞ்ச பங்களாவுல ஆத்மாக்கள் சுத்தி வர்றது உண்மையா?" •

"உண்மை! ஆனா எல்லா நேரமும் எல்லார் கண்களுக்கும் அது தெரியாது. நுட்பமான கிருமியை பார்க்க லென்ஸை உபயோகிக்கிற மாதிரி ஆவிகளைப் பார்க்க சில சக்திகளை நம்முடைய தேகத்துக்குள்ள உருவாக்கிக்கணும்."

"அப்படின்னா உங்களால ஆவியைப் பார்க்க முடியுமா?"

"நிச்சயமா.. உன் கூடவே ஒரு ஆத்மா இருப்பதைப் பார்க்கறேனே..."

"என்ன சொல்கிறீங்க!"

"போகப் போக புரிஞ்சுப்பே... கொஞ்ச நாள் கழிச்சு வாழ்க்கைல யாரும் சொல்லாமலே என்னை வந்து சந்திப்பே. அப்ப இப்படியெல்லாம் கேள்வி கேட்கமாட்டே."

"அப்படின்னா இப்ப உங்களோட பதில்?"

"புறப்படு... ஒரு அற்புதமான அனுபவம் உனக்கு காத்திருக்கு... அதுக்கு பிறகு நாம நிறைய பேசலாம்."

அவர் பேசி முடித்து விட்டது போல எழுந்தார். அனுபமா பார்த்துக் கொண்டே இருந்தாள். அவர் சிரித்தபடி அங்கிருந்து போன பிறகும் அவளிடம் பிரமிப்பு விலகவில்லை!

# 12

அனுபவம் தான் நிதர்சனம். அனுபவம் தான் சத்யம். அனுபவங்களே உண்மையும் கூட. ஆனால், அவைகளை வார்த்தைப்படுத்தவோ, பிறர்க்குக் கடன் கொடுக்கவோ முடியாது. அது ஒரு சுயம்!"

**-கௌசிக் ஆச்சார்யா**

**வீ**டு திரும்பியவளிடம் பேச்சே இல்லை.

சிவகாமி கூட ஆச்சர்யப்பட்டாள்.

"என்னடா ரொம்ப அமைதியா இருக்கே... என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லம்மா...

"அந்த வார்த்தைக்கு அர்த்தம், நிறைய இருக்குங்கறதுதான்."

"இருக்கலாம். இப்போ எதையும் கேட்காதே"

"சரி... நான் மாப்ளை வீட்டுக்காரங்களோட பேசிட்டேன். திரும்ப வர ஒத்துக்கிட்டாங்க!"

"எப்பம்மா?"

"சொல்றேன்னு சொல்லியிருக்காங்க...!"

மறுநாள் ஆபீஸில்...

"மேடம்... எடிட்டர் கூப்பிட்றார்" என்றான் ஆபீஸ் பாய். எழுந்து போய் அவரை சந்தித்தாள்.

"என்ன அனு... வந்தவுடனே என்னை பார்ப்பேன்னு நினைச்சேன். சீட்ல உட்கார்ந்துட்டே?"

"அப்பறமா வருவோம்னு நினைச்சேன்

சார்...

"சரி.. கௌசிக் ஆச்சார்யாவை சந்திச்சியா?"

"ம்...!"

"இந்த ஒரு வார்த்தைக்காக உன்னைக் கூப்பிடலை அனுபமா என்ன நடந்தது?"

"என்னென்னவோ நடந்தது சார். மொத்தத்துல நான் குழப்பத்துல இருக்கேன்.."

"நடந்ததைச் சொல்."

அவளும் சொன்னாள். அவரிடமும் பிரமிப்பு ஒரு குதிகுதித்தது. அதே சமயம் "இது ஏன் கண்கட்டு வித்தையா இருக்கக் கூடாது?" என்றும் ஒரு கேள்வி அவரிடமிருந்து பிறந்தது.

"கண்கட்டுன்னா?"

"மேஜிக்!"

"அப்படின்னா...?"

"என்னம்மா... எவ்வளவு மேஜிக் ஷோக்கள்ல மேஜிக் பண்றவர் அந்தரத்துல மிதக்கறதை பார்த்துருக்கோம்..."

"அது எப்படி சார்...?"

"அது ஒண்ணும் மாயமந்திரம் இல்லை. அது ஒருவித பயிற்சி!"

"அப்ப ஆச்சார்யா என்னை அப்படி ஒரு மேஜிக்ல கட்டிப்போட்டு அனுப்பிட்டாரா?"

"எனக்குத் தெரியாது. இருந்தாலும் இப்படி கேட்டுப் பார்த்துக்கறது தான் நமக்கு நல்லது."

"அப்ப மேஜிக்குங்கறது ஒரு ஏமாத்து வேலையா?"

"சமூக அங்கீகாரமுள்ள ஒரு ஜாலியான மனித சக்திதான் அது."

"எனக்கு சில புது அனுபவங்கள் காத்திருக்குன்னு சொன்னாரே..?"

"எதை வெச்சு சொன்னாரோ...

தெரியல! எனிவே கேள்வில விழுந்துட்டே பொறுத்திருந்து பார்ப்போம். போய் வேலையைப்பார். ஆமா... எப்ப மாப்பிள்ளை உன்னை பார்க்க வரப்போறார்..?"

"தெரியாது. சொல்றதா சொல்லியிருக்காங்க...

"ஆல் த பெஸ்ட்!"

— எழுந்து வெளியே வந்தாள். அரவிந்தன் பார்த்துக் கொண்டேயிருந்தான். அலட்சியமாக அவனைத் தாண்டிக்கொண்டு சென்றாள். அவனை அது பிசைந்தது. நெடுநேரம் புழுங்கிவிட்டு அவளை நோக்கி நடந்தான்.

"மேடம்... என்றான்.

நிமிர்ந்து பார்த்தாள்.

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..

"பேசுங்க..."

"உட்காரலாமா?"

"தாராளமா...."

உட்கார்ந்தான். ஆனால், அமைதியாக கைகளை பிசைந்தான்.

"என்ன அரவிந்தன்...?"

"உங்க கல்யாண முயற்சி எதுவரையில இருக்கு?"

"எதுக்கு கேக்கறீங்க...?"

"சும்மா தெரிஞ்சுக்கத்தான்!"

"ஏன்... அதுலயும் ஏதாவது கலாட்டா பண்ணலாம்னா...?"

"மேடம்"

"டோன்ட் ஷவுட், எனக்கு உங்க புத்தி பத்தி தெரியும். அன்னிக்கு நீங்க வேணும்னே எனக்கு தகவல் சொல்லாம விட்டுட்டீங்கங்கற உண்மையும் தெரியும்."

அவன் அவளை வெறித்தான்.

"சரி இப்ப எதுக்கு வந்திருக்கீங்க. கமான் ஸ்பீக்!"

"அது... அது...

"எது?"

"ஐ ஆம் சாரி அனு....

"அனுவா?"

"அ... ஆமாம்! நான் உன்னை தீவிரமா லவ் பண்றேன். ப்ளீஸ் அக்சப்ட் மை லவ்..."

அனுபமா, அடுத்த நொடி, 'க்ளுக்"கென்று சிரித்து விட்டாள். அது அவனை மேலும் குத்தியது. குதறியது.

"இப்படி சிரிக்காதே அனு எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு."

"சிரிக்காம.. ஏதோ கத்திரிக்கா, வெண்டக்கா வாங்கற மாதிரி ஐ லவ் யூன்னா என்ன அர்த்தம் அரவிந்தன்."

"நீ எப்படி நினைச்சாலும் சரி. எனக்கு உன்னோட புத்திசாலித்தனம் ரொம்ப பிடிச்சிருக்கு. உன்னையும் ரொம்ப பிடிச்சிருக்கு...

"சாரி அரவிந்தன் எனக்கு உன்னை பிடிக்கலை. இப்ப நீயும் நானும் ஆபீஸ்ல ஒர்க் பண்ணிக்கிட்டிருக்கோம். நீ இப்படி பேசிக்கிட்டிருக்கறது இன்டிசிப்ளின். முதல் தடவைங்கறதால உன்னை மன்னிக்கறேன். இதை மறக்கவும் தயாரா இருக்கேன். போய் வேலையைப் பார்..."

"அனு..."

"இப்ப போகப் போறியா இல்ல எடிட்டர் கிட்ட கம்ப்ளைண்ட் பண்ணட்டுமா?"

"பண்ணு என்ன ஆனாலும் சரி. எனக்கு உன்னை கல்யாணம் பண்ணிக்க தகுதி இல்லையா?"

"சரி.. இரு... அவள் எழுந்து ராம்நாத் அறையை நோக்கி சென்றாள். அடுத்த ஐந்தாவது நிமிடம் அவன் அழைக்கப்பட்டான்.

"என்னய்யா... என்ன இது கூத்து?"

"கூத்து இல்ல சார். என் மனசுல இருந்த ஆசையைத்தான் வெளிப்படுத்தியிருக்கேன்."

"அதான் அவ தனக்கு விருப்பமில்லைன்னு சொல்லிட்டாளே..."

"அப்படின்னா எனக்கு தற்கொலை பண்ணிக்கறத தவிர வேற வழியில்லை சார்.." அரவிந்தன் கொஞ்சமும் தயங்காமல் அவர்கள் இருவருக்கும் அதிர்ச்சியளித்தான்.

"யோவ் என்னைய்யா உளர்றே?"

"உள்ளதை சொல்றேன் சார். இனியும் நான் என் காதலைச் சொல்லாம விட்டா அனு எனக்கு இல்லாம போயிடுவா..."

"இதோ பாருய்யா.. உனக்கு என்ன பைத்தியமா?"

"ஆமாம் சார்... அனு மேல எனக்கு காதல் பைத்தியம்..

"புடலங்கா. போலீஸ்ல சொல்வேன். வேலை பார்க்க வந்த இடத்துல என்னய்யா இதெல்லாம்?"

"சார்... நான் துணிஞ்சிட்டேன். எது நடந்தாலும் சரி. ஒண்ணு அனு என்னைக் கல்யாணம் செய்துக்கணும். இல்லை நான் சாகணும்."

"யோவ் என்னய்யா இது சின்னப்புள்ள மாதிரி?"

"எனக்கு என்ன சார் குறை...? யாரோ முகம் தெரியாத நபரை இவ கல்யாணம் செய்துக்கறதுக்கு என்னை செய்துக்கக் கூடாதா?"

"நீ புரிஞ்சுதான் பேசறியா?"

"நல்லா தெரிஞ்சும் பேசுறேன்...

"என்ன பிளாக்மெயில் பண்றியா?"

"என்ன வேணும்னாலும்

சொல்லிக்கங்க...

ராம்நாத் அடுத்த நொடியே போலீஸுக்கு தான் போன் செய்தார்!

ஒரு மாதம் ஓடி விட்டது!

"அனுவை பெண் பார்க்க வந்து பிடித்திருப்பதாகக் கூறி நிச்சயதார்த்தம் முடிந்து திருமணத் தேதி கூட வந்துவிட்டது.

அரவிந்தனைத்தான் நியூசென்ஸ் கேஸில் புக் செய்து மூன்று மாதத்திற்கு உள்ளே தள்ளிவிட்டார்கள்.

அவனும் கிட்டத்தட்ட மனநோயாளிபோல ஆகிவிட்டான்.

சிறைச்சாலை சுவரில் "அனுபமா உன்னை சும்மா விடமாட்டேன். அனுபமா உன்னை சும்மா விடமாட்டேன்.." என்று ஒரே கிறுக்கல்.

அதை ஒருவித மனநோய் என்று சொன்னார்கள்.

ராம்நாத்துக்கு மட்டும் அவனது கொதிப்பு எடுத்துச்சொல்லப்பட்டது. அவன் கைதியாக இருக்கும்போதே ட்ரீட்மெண்ட்டுக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.. செலவை தான் ஏற்றுக் கொள்வதாகவும் கூறினார். சொன்ன சூட்டோடு அனுவின் திருமனத்திற்கும் புறப்பட்டார்!

கல்யாணவீடே ஜேஜே என்றிருந்தது.

மாப்பிள்ளை மாணிக்கவேல் பார்க்க ராஜாவாட்டம் இருந்தான். சந்தோஷமாக அனுபமா கழுத்தில் தாலியைக் கட்டத் துடித்துக் கொண்டிருந்தபோது தான் அந்தத் தகவல் வந்து சேர்ந்தது.

அரவிந்தன் சிறையில் இருந்து தப்பித்துவிட்டான்.

நேராக கல்யாண வீட்டிற்குத்தான் வருவான்.

மாப்பிள்ளை மாணிக்கவேல் தான் அவனது குறி என்று ஆளுக்கு ஆள் பேசிக் கொண்டார்கள். சிவகாமி துடித்துப் போய்விட்டாள். நல்லவேளை மாப்பிள்ளை இதற்கெல்லாம் துளிகூட அலட்டிக் கொள்ளவில்லை. அவனுக்கு ஏற்கெனவே எல்லா விவரங்களும் கூறப்பட்டிருந்தது. எனவே அரவிந்தனுக்காக அனுதாபம் தான் கொண்டான். கல்யாண மண்டபத்தைச் சுற்றிலும் போலீஸ் காவல் வேறு!

"இவ்வளவு பேரை மீறிக்கொண்டு கல்யாண வீட்டுக்குள் நுழைந்து கொலை செய்ய அவன் ஒன்றும் சினிமா ஹீரோ இல்லை. போலீஸும் சினிமா போலீஸ் இல்லை!" என்கிற கமெண்ட்டுடன் சில போலீஸ்காரர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அவ்வளவையும் பார்க்கப் பார்க்க சிவகாமிக்கு மிரட்சி தான் அதிகரித்தது. "கடவுளே என்ன இது சோதனை" என்று குமுறினாள். ராம்நாத் ஆறுதல் சொன்னார்.

எப்படியோ சுதாரித்து முகூர்த்த நேரம் வந்து விட மாணிக்கவேலும் அனுபமா கழுத்தில் தாலியைக் கட்டி முடித்தான்.

"அப்பாடா...!" எல்லோரும் வாழ்த்தினார்கள். இன்ஸ்பெக்டர் ஒருவர் அந்த வேளை பார்த்து வேகமாக உள்ளே நுழைந்தார். ஐய்யய்யோ அரவிந்தன் ஒளிந்திருப்பது தெரிந்துதான் இவர் வந்திருக்கிறாரா என்பதுபோல எல்லோரும் அவரைப் பார்க்க அவர் மாப்பிள்ளை மாணிக்கவேலை நெருங்கி உற்சாகமாக கைகுலுக்கினார்.

அப்படியே தப்பி ஓடிய அரவிந்தனை ஒரு பொது ஜனத்தின் உதவியுடன் மடக்கிப் பிடித்து திரும்பவும் சிறையிலடைத்து

விடடதாகக் கூறவும் எல்லோருமே நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். சிவகாமி கைகளைக் கூப்பிக்கொண்டு ஆனந்தக் கண்ணீரே விட்டாள்!

வீட்டுவாசலில் தேங்கிய அலங்கரிக்கப்பட்ட காரில் இருந்து அனுவும், மாணிக்கவேலும் இறங்க ஆரத்தி கரைத்துக் கொட்டி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

மாப்பிள்ளை பெண்ணுக்கான மறு அழைப்பு!

ராம்நாத்தும் விலகாமல் கூடவே இருந்தார்.

நல்ல செய்தி சொல்லி நெஞ்சில் பால் வார்த்த அந்த இன்ஸ்பெக்டரையும் அவர் விட்டுவிடவில்லை.

"வீடுவரை வந்து ஒரு வாய் சாப்பிட்டுட்டு போங்க..." என்று கையோடு இழுத்து வந்துவிட்டார்.

எல்லோரும் உள்ளே நுழைய மளமளவென்று நாற்காலிகள் போடப்பட்டன.

இன்ஸ்பெக்டரும் அமர்ந்தார்.

அப்படியே நோட்டமிட்டார்.

அவர் பார்வையில் அனுவின் அப்பாவின் படம் பட்டது.

அடுத்த நொடி பகீரென்று பார்வை விரிந்து முகத்தில் பரபரப்பு குதித்து ஆடியது. ராம்நாத் கவனித்தார். "என்ன இன்ஸ்பெக்டர் என்ன பாக்கறீங்க...?"

"அந்த போட்டோவுல இருக்கறது யார்?"

"அது அனுவோட அப்பா...

"அப்பாவா.. பேர்?"

"அனு இங்க வா.. ராம்நாத் அழைத்தார். அனுவும் நெருங்கினாள்.

"உங்கப்பா பேர் என்னம்மா?"

"ராமச்சந்திரன்!"

"ராமச்சந்திரனா... மை காட்.. இவர் எப்ப இறந்தார்?"

"அவர் செத்துப்போய் பல வருஷம் ஆச்சே. இந்த பொண்ணு பொறக்ககூட இல்லை. ஆமா எதுக்கு கேக்கறீங்க...?"

"என்னங்க சொல்றீங்க... இவர்தாங்க ஜெயில்ல இருந்து தப்பிச்சு ஓடின அரவிந்தனைப் பிடிச்சு இழுத்துகிட்டு வந்து எங்ககிட்ட ஒப்படைச்சவர்!"

"என்ன சொல்றீங்க... இன்ஸ்பெக்டர்...

"ஆமாம் மிஸ்டர் ராம்நாத். உங்க பேர் என்னன்னு கேட்டேன். என் பேர் ராமச்சந்திரன், பெண்ணுக்கு நான் உறவுதான். என் ஆசிகளை சொல்லுங்கன்னு கூடச் சொன்னாரே..."

-ராம்நாத் விக்கித்துப்போய் அனுபமாவைப் பார்த்தார். அவள் அன்று கௌசிக் ஆச்சார்யா சொன்ன நிஜங்களில் தன்னைத் தொலைத்திருந்தாள்.

சிவகாமி ஓடிப்போய் படம் முன் நின்று கொண்டு ஆனந்தக் கண்ணீரை வழியவிட ஆரம்பித்தாள்.

## முற்றும்

**SRI SAI PUBLICATIONS**
Editor N.T Madhdavan, No : 50, Nallathambi Street, Triplicance, Chennai - 05.
Printed & Published by
N.T Madhavan At Aaathi Sakthi Graphics, 24/2, Pycrafts 1st Street, Royapettai, Chennai - 14. Cell: 9791122262
Designing: saTyan laYout, www.satyanlayout.com